அரசாப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 கார்த்திகை திங்கள் 26ம் நாள் (11—12—60) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 21 | இதழ் 28

# பள்ளிவாசலுக்கு பௌத்தர்கள் கடும் எதிர்ப்பு



## கூறகந்த கிராமம் புத்தர் காலடி வைத்த இடமாம்

### அங்கே ஏன் முஸ்லிம்களின் வணக்க ஸ்தலம்?
### சிங்களப் பத்திரிகை கேள்வி-கலாசார மந்திரிக்கு மகஜர்

(சுதந்திரன் நிருபர்)

கூறகந்த என்ற கிராமத்தில் உள்ள முஸ்லிம்கள் அங்கு தங்களுக்கெனக் கட்டிக்கொண்ட பள்ளிவாசலுக்கு பௌத்தர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அந்த இடத்தைத் தமக்கு முஸ்லிம்களிடமிருந்து மீட்டுத் தரவேண்டும் என்று மகஜர் சமர்ப்பிக்கிறார்கள்.

கூறகந்த என்ற கிராமம் பலாங்கொடையிலிருந்து 14 மைல் தூரத்தில் உள்ளது. தல்தொட்ட என்ற ஊருக்கு அணித்தாக இருக்கிறது இங்குள்ளவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள். கிராமமே முஸ்லிம் கிராமம் என்று சொல்லலாம்.

முஸ்லிம்கள் தங்களுக்கென வணக்க ஸ்தலம் (பள்ளிவாசல்) ஒன்றை இங்கு கட்டிக்கொண்டார்கள். இதற்குப் பௌத்தர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

கூறகந்த என்பது புத்தர் பெருமான் இலங்கையில் காலடி வைத்த புனித ஸ்தலங்களிலே ஒன்று என்கிறார்கள். ஆதலால் அந்த இடம் தங்களுக்கு மிக முக்கியமானது என்று கருதுகிறார்கள். எனவேதான் பள்ளிவாசல் இருப்பதற்கு எதிர்ப்பு.

'சுசரிதமக' என்ற பெயரில் உள்ள சிங்களப் பத்திரிகை ஒன்று இது விஷயத்தைப் பெரும் பிரச்சினையாக்கிக் குரல் எழுப்பி வருகிறது. கூறகந்தயில முஸ்லிம்களா? அவர்களுக்கு அங்கு வணக்க ஸ்தலமா? என்ற ரீதியில் கேட்கிறது.

எதிர்ப்புக் குரலோடு விஷயம் நின்று விடவில்லை. கலாசார மந்திரிக்கும் மகஜர் போகிறது. கூறகந்தக் கிராமத்தை முஸ்லிம்களிடமிருந்து மீட்டு அதற்கு உரியவர்களான எங்களுக்குத் தாருங்கள் என்றவாறு மகஜரில் கேட்கிறார்கள் பௌத்தர்கள்.

"முதலில் இந்திய வம்சாவளித் தமிழரின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது மற்றத் தமிழர்கள் எல்லாரும் 'நமக்கென்ன அது அவர்கள் விஷயம்' என்று சும்மா இருந்து விட்டார்கள்.

#### மற்றத தமிழர்கள்

"மற்றத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட போது, 'அது தமிழர் விஷயம்; நமக்கென்ன' என்று சும்மா இருந்து விட்டார்கள் மற்ற இனத்தவர்கள்.

#### கத்தோலிக்கர்கள்

"கத்தோலிக்கர்களின் மத உரிமையில் கை வைக்கப்பட்டபோது, 'அது கத்தோலிக்கர் விஷயம்; நமக்கென்ன' என்று சும்மா இருந்து விட்டார்கள் மற்ற மதத்தவர்கள்.

#### முஸ்லிம்கள்

"இப்போது முஸ்லிம்களின் மத உரிமைக்கு ஆபத்து. ஒன்று மாறி ஒன்று

(9ம் பக்கம் பார்க்க)

## புதிய தாதிமார் பயிற்சிக் கல்லூரி
### அதிபருக்கு பாராட்டு

புதிதாகத் தொடக்கப்பட்ட யாழ் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறும் தாதிமாருக்குப் பட்டமளிக்கும் வைபவம் அண்மையில் நடந்தது. இதில் கலந்து கொண்ட சுகாதார சேவை டைரக்டர் டபிள்யு. ஏ. கருணரத்தின கல்லூரி அதிபர் திருமதி என். வல்லிபுரத்தின் சேவையையும் திறமையையும் பாராட்டிப் பேசினார்.

அவர் சொன்னார்:—"நான் பல வைபவங்களில் கலந்து கொண்டிருக்கிறேன். இந்த வைபவம் மிக நேர்த்தியாக அமைந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்."

முதல் கோஷ்டியாக இம்முறை பயிற்சி பெற்று வெளியேறிய 33 தாதிமாருக்குப்பட்டம் அளிக்கப்பட்டது. தாதி ஒருவருக்கு சிரேஷ்ட தாயார் தலையங்கி அணிவதை மேலே உள்ள படத்தில் காணலாம். படம்: பிறின்ஸ் ஸ்ருடியோ 'பபி'

## சிங்கள ஆசிரியர் பயிற்சி பெற விரும்பும் முஸ்லிம்கள்

### அவர்களைச் சிங்களப் பயிற்சிக் கல்லூரிகளில் அனுமதிக்கக் கூடாது

### பௌத்தர்கள் எதிர்ப்புஇயக்கம்

(சுதந்திரன் நிருபர்)

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையின் விளைவாகச் சில முஸ்லிம்கள் சிங்களப் பயிற்சிக் கல்லூரிகளில் சேர்ந்து சிங்கள ஆசிரியர் பயிற்சி பெற விரும்புவது தெரிந்ததே இவர்களையெல்லாம் சிங்கள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் அனுமதிக்கக் கூடாது என்று ஒரு இயக்கம் இப்போது தென் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம்களில் சிங்களத்தோடு சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் (எஸ். எஸ். ஸி.) தேறியவர்களும், சிங்களம் தெரிந்த சில ஆசிரியர்களும் சிங்கள பயிற்சிக் கல்லூரிகளில் சேர்ந்து பயிற்சி பெற்று சிங்கள ஆசிரியர்களாக வெளியே வர விரும்புகிறார்கள். அப்படிச் சிங்கள ஆசிரியர்களாக வெளியே வந்தால், வேலை வாய்ப்பு, உரிமைகள், சலுகைகள் எல்லாம் ஏராளமாகக் கிடைக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள்

#### சிங்களவர் எதிர்ப்பு

ஆனால் எஸ். எஸ். ஸி. தேறிட சிங்கள வாலிபர்கள் இதை வெறுக்கிறார்கள், எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். முஸ்லிம்களுக்குத் தனியாக அட்டாளைச்சேனை, அளுத்கமை, கண்டி போன்ற இடங்களில் பயிற்சிக் கல்லூரிகள் இருப்பதைச் சுட்டிக் காட்டி அவர்கள் அங்கு பயிற்சி பெறலாமே என்கிறார்கள். வேண்டுமானால் பயிற்சிக் கலாசாலைகளிலும் சிங்களத்தை ஒரு பாடமாக

(9-ம் பக்கம் பார்க்க)

முதாய்வு (ASTHMA) சங்காரி
ரிச்லெட்ஸ் பெக்டோரல்

* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. இந்நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நட்ட ஈட்டுக் குற்றங்களில்

## பிரதிப் பொறுப்பு-எஜமானும் வேலையாளும் 1

## Vicarious Liability—Master & Servant 1

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக் குழு சட்ட ஆலோசகர்

ஒருவர் செய்யும் குற்றத்திற்காக இன்னொருவர் பொறுப்பேற்பதே பிரதிப் பொறுப்பு (Vicarious Liability) எனப்படும். இவ்வகையில் சேர்ந்ததே வேலையாளின் நட்டஈட்டுக் குற்றத்திற்காக எஜமான் ஏற்கும் பொறுப்பாகும். இக்கொள்கையில் இலங்கையின் சட்டம் ஆங்கிலச் சட்டத்தையே தழுவி நிற்கிறது. பொதுச் சட்டமாகிய ரோமன்—டச் சட்டத்தில் வேலையாள் ஒரு அடிமையாயிருந்தால்தான் எஜமானருக்கு இப்பேர்ப்பட்ட பொறுப்பு உண்டாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### இரண்டு காரணங்கள்

நட்டஈட்டுக் குற்றம் என்று அறியக்கூடிய ஒரு செயலை எஜமானரின் கட்டளைப்படி வேலையாள் செய்தால் அதனுல் வரும் நட்டத்துக்கு எஜமானரும் வேலையாளும் சேர்ந்து குற்றம் செய்வோர் (Joint Wrong—Doers) என்பதில் ஒரு ஐயமிராது. பொதுவாகப் புலப்படாதது யாதெனில் எஜமானர் ஒரு சட்டரீதியான செயலையாற்றும்படி விதிக்க, வேலையாள் அதைப் பணியாற்றும்பொழுது நட்டஈட்டுக் குற்றமாக வரும் முறையில் செய்ய, அதனுல் வரும் நட்டத்துக்கு எஜமானர் பொறுப்பு என்பதே. இச்சந்தர்ப்பத்தில் அவரின்பேரில் நட்டஈட்டுப் பொறுப்பு வருவதே பிரதிப் பொறுப்பாகும். இப்பேர்ப்பட்ட பொறுப்பு எஜமானர்மேல் விளைவதற்கு இரு காரணங்கள் ஒழுங்குற நிகழ வேண்டும். ஒன்று இவர்களிருவரிடையும் எஜமானர்-வேலையாள் என்னும் தொடர்பு இருக்க வேண்டும். இரண்டாவது செய்யப்பட்ட செயல் எஜமானரின் கருமமாற்றும் தருணத்தில் அவ்வேலையாளின் கடமையாற்றும் கால் செய்த செயலாயிருக்க வேண்டும். இவையிரண்டையும் விரிவாய் ஆராய்வோம்.

### எஜமானர் வேலையாள் தொடர்பு

இருவருக்குமிடையேயுள்ள தொடர்பு எஜமானர் வேலையாள் தொடர்போ இல்லையோவென அறிவதற்கு நானுவித மூலாம்சங்களை ஆராய வேண்டும். ஒரு குறிக்கப்பட்ட சம்பளம் கொடுபட்டது அல்லது வேலையாள் எஜமானரின் அதிகாரத்துக்கடங்கியே வேலை பார்க்கிறுன் என்பவை மூலாம்சங்களில் சில. எனினும் அவை முடிவான தீர்ப்பெனக் கூற முடியாது. ஆனுல் நட்டம் விளைத்த செயலையாற்றும் தறுவாயில் வேலை பார்க்கும் முறையில் கூட எஜமானர் வேலையாளின்மேல் அதிகாரம் செலுத்தக்கூடியதாயிருந்தது என்பது புனுகில் எஜமானர்—வேலையாள தொடர்பு இருக்கிறது என்பது ஒரு முடிவான தீர்ப்பாகும் இம்மூலாம்சம் வேலையாளோ சுயாதீன ஒப்பந்தக்காரரோ (Independant Contractor) என்பதைச் சுட்டிக்காட்டும். சுயாதீன ஒப்பந்தக்காரரின் நட்டஈட்டுக் குற்றங்களுக்கு முதலாளி பாத்தியப்பட்டவரல்லவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### அடக்குமுறை

ஒரு வேலை கொடுப்போர் என்ன வேலை செய்ய வேண்டுமென்பதைக் குறிப்பிட்டு விட்டு அப்பணியையாற்றும் காலம், பணியாற்றும் முறை யாவையும் வேலை செய்பவரின் சுயாதீனத்தில் விட்டால் அத்தொடர்பு சுயாதீன ஒப்பந்தக்காரரின் தொடர்பாகும். உதாரணமாக ஒருவரை வீடு கட்டுவதற்காக நான் சம்பளத்தில் பிடித்து அன்றன்று என்ன கருமமாற்ற வேண்டும், எவ்வளவு கால நேரத்துக்குப் பணியாற்ற வேண்டுமென்பதைக் குறிப்பிட்டால் அப்படிக் கடமையாற்றுபவர் வேலையாளாகக் கருதப்படுவர். இத்தொடர்பை நிர்ணயிக்க வேண்டின் சேவைக்குக் கொடுக்கும் வேதனத்தின் முறை, சேவை செய்யும் காலவரை, சேவையின் தன்மை, வேலையின்றும் விலக்கும் தத்துவம் முதலிய காரணங்களைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. ஆனுல் சுத்ததத்துவமாக செய்யும் வேலையில் எஜமானருக்கு இருக்கும் அடக்குமுறையைக்கொண்டே முடிவு செய்யவாம். பின்வரும் உதாரணங்களால் இதை விளங்கிக் கொள்ளலாம்:-

### தாதியும் டாக்டரும்

ஒரு தனிப்பட்ட ஆஸ்பத்திரியில் ரண சிகிச்சை செய்யும் ஒரு வைத்தியர் சிகிச்சை செய்கையில், ஒரு வேலையாளாகக் கருதப்படமாட்டார். ஆனுல் தாதிமாராயினும் சரி வைத்தியராயினும் சரி ஆஸ்பத்திரி நிர்வாக அல்லது ஏவல்புரியும் வேலைகளில் ஈடுபட்டால் அவர்கள் ஆஸ்பத்திரிச் சொந்தக்காரரின் வேலையாட்களாகக் கருதப்பட்டு அவர்களின் நட்டஈட்டு குற்றத்திற்காக சொந்தக்காரர் பொறுப்பேற்க வேண்டி நேரிடும். ஒரு தாதி தன் தாதி உத்தியோகமாகிய நட்ப வேலையிலீடுபடும் பொழுது இழைத்த குற்றத்திற்காக ஆஸ்பத்திரியதிபர்கள் பொறுப்பல்ல என்று ஆங்கில நீதிமன்றத்தில தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனுல் இலங்கையில் வித்திபாசமான தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது கண்டியிலுள்ள ஒரு மருத்துவாலயத்தின் உடமைக்காரார் ஒரு தாதிப் பெண்ணை உத்தியோகத்தில் அமர்த்தியிருந்தார் அவள் ("X"ray) எக்ஸ்றே படங்கள் எடுக்கும் 3 வலைக்குப் பொறுப்பாயிருந்தாள். இப்பணியாற்றுகையில் ஒரு பெண்ணின் உடம்பு எக்ஸ்றேயால் கடுமையாகத் தாக்கப்பட்டு நோயாளியாக்கப்பட்டாள். மாவட்ட நீதிபதி தாதியின் அசண்டையால் தான் நட்டம் ஏற்பட்டது எனத்தீர்ப்பளித்தார். இதையொட்டி உயர்நீதிமன்றம் மருத்துவலாய உடமைக்காரர் இந் நட்ட ஈட்டுக்குப் பொறுப்புள்ளவரெனத் தீர்ப்பளித்தது. தாதி தனக்களிக்கப்பட்ட வேலையின் தத்துவத்துக் கமையக் கடமையாற்றிறுளென்றும், இப்பணியால் வந்த சகாயம் உடமைக்காரரைச் சேர்ந்தபடியாலும் உடமைக்காரரே தாதியின அசண்டைக்குப் பிரதிப்பொறுப்புள்ளவரெனவும் தீர்க்கப்பட்டது.

### குதிரையும் வண்டிக்காரனும்

ஒரு பாடசாலை உபாத்தியாயர் பாடசாலை அதிபர்களின் வேலையாளல்ல, சுயாதின ஒப்பந்தக்காரன் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஒரு குதிரை வண்டியின் உடமைக்காரர் குதிரையையும் கடிவாளங்களையும் தானே கொடுத்து ஒரு குதிரை லாயத்திலிருந்து ஒரு சவாரிக்காரனை கூலி ஒப்பந்தத்துக்கு ஏற்றுக் கொண்டார். அவர் எங்கு போகவேண்டுமோ அங்கெல்லாம் குதிரை வண்டி விட வேண்டிய கடமை சவாரிக்காரனுக்குண்டு. இந்தச் சந்தர்ப்பத்தில் சவாரிக்காரனின் குற்றத்திற்கு அவரே பொறுப்பாளியெனத் தீர்க்கப்பட்டது இதற்கு எதிர்மாறுக இன்னுெரு வழக்கில் ஒரு வண்டியின் உடமைக்காரர் லாயக்காரரிடமிருந்து

[10-ம் பக்கம் பார்க்க]

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா
கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்

ஏக விநியோகஸ்தர்கள்

குண்டன்மால்ஸ்,

26, கெய்லர் வீதி, கொழும்பு.

விஷ ஜெந்துக்கள்:

# எறும்புக் கடியும் விஷமாகும்

## உண்ணிகள், தவளைகள்,

## வீட்டு மிருகங்களாலும் ஆபத்து வரலாம்

கூடி வாழும் உயிரினங்களுள் உண்ணிகள் குறிப்பிடத்தக்கவை.

இவற்றில் பல இனங்களுண்டு. (1) சருகுண்ணி, (2) தாரா உண்ணி, (3) நாய் உண்ணி, (4) காட்டுண்ணி இவைகள் கடித்தாலும் விஷமுண்டு. கடித்த இடம் சிறு கடுப்புடன் வீக்கம் தோன்றிக் கடிவாயில் புண் உண்டாகி நீர் வடியும். இவைகளில் சில காதுத் துவாரங்களுக்கூடாகச்சென்று அங்கு விருத்தியாகியும் விடும். ஆகையால் இவைகள் நமது வீடுகளில் பரவாதபடி பாதுகாப்பாக இருத்தல் வேண்டும். சில உண்ணிகள் வயிற்றுக்குள் சென்று பலவித மான நோய்களுக்குக் காரணமாகி விடும். வயிற்றுள் சென்றுல் வாந்தி, வயிற்றுக் குத்து, வயிற்று எரிவு முதலிய குணங்களுண்டாகும். தக்க மருந்துகளால் குணமாக்கி விடல் வேண்டும். கவலையீனமாக இருந்தால் மிகுந்த துன்பம் உண்டாகலாம்.

### தவளைகள்

தவளைகள் பாம்புக்கு இரையானவை அவையும் சில சந்தர்ப்பத்தில் மக்களைத் தாக்கும். தாக்கினுல் அற்ப விஷமாகும். தவளைகளின் இறந்த எலும்புகள் எங்கள் கால்களில் தாக்குவதால் விஷமாகும். இதனுல் புண்ணுண்டாகும். இதற்கு ... ஏற்றது.

### அட்டைகள்:

நாட்டின் சுவாத்தியத்துக்கேற்ப, பலவிதமான அட்டைகளை நாம் காண்கின்ருேம் இதன் விருத்தி அதிகமாகும். இவையும் மக்களைத் தாக்கும். மலை நாட்டிலுள்ள அட்டை...

விஷ வைத்தியர்
க. சிற்றம்பலம்

மக்களின் இரத்தத்தைக் குடிக்கும் தன்மையாய்ந்தது. இதன் விஷத்தால் சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்களுண்டாகும். அட்டைகள் கடித்தவுடனே புகையிலையின் சாயமும் சுண்ணம்புமேன்ச்சாறும் உப்பும் கலந்து கடிவாயைத் துப்புரவு செய்தால் விஷமிறங்கும்.

### வீட்டு மிருகங்கள்:

நமது வீட்டில் ஆடு, மாடு, குதிரை, கழுதை, எருமை முதலிய பிராணிகளை நமது பிரயோசனத்துக்காக வளர்க்கின்ருேம். அவையும் சில சந்தர்ப்பங்களில் நம்மைத் தாக்குகின்றன. இவைகள் கால்களால் மிதிக்கும், தந்தங்களால் தாக்கும் (கடிக்கும்) கொம்பினுல் முட்டும். ஆனுல் தந்தங்களால் தாக்கும் பொழுதுதான் விஷமாகும். விசர் நாயால் தாக்கப்பட்ட மிருகங்கள் நம்மைத் தாக்கினுல் கொடிய விஷமாகும். சாதுவான பிராணி நம்மைத் தாக்கும்போது அதன் குழலையும், சந்தர்ப்பத்தையும் ஆராய்ந்து உடனே சிகிச்சை முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

உலகத்தில் கோடிக்கணக்கான எறும்புகளுண்டு. அவற்றிலும் பல இனங்களுண்டு. நாட்டுக்கும் சுவாத்தியத்துக்கும் ஏற்றவாறு வகைகளும், விருத்தியும் உண்டாகின்றன. இவைகள் ஒற்றுமையிலும், சுறுசுறுப்பிலும் நமக்குப் பாடம் கற்பிப்பவை. எறும்புகளைப் போல ஒற்றுமையும் சுறுசுறுப்பும், நம்மிடமிருக்குமாயின் நாம் நமது உரிமைகளையும் பொருளாதார வளங்களையும் பெருக்கிப் பெரும் புகழ் பெற்று வாழலாம்.

எறும்புகள் தங்கள் பகைவரைத் தாக்கும்போது கூட்டமாகவே தாக்கும். இவை புற்றுக்களில் மரப்பொந்துகளில் பற்றைகளுக்குக்கீழ் வாழ்கின்றன. இயற்கையை அறியும் தன்மை இச் சிறு பிராணிகளுக்குண்டு. மழையின் வரவை முன்கூட்டியே அறிந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும். இவை மக்களைத் தாக்கினுலும் விஷமாகும். கடித்த உடனே கடுக்கல், வலி, விறுவிறுப்பு, முதலியன உண்டாகும். பின்னர் அந்த இடத்தில் தடித்து வீங்கிப் புண் உண்டாகும். இதற்கும் விஷ சிகிச்சைகளுண்டு.

—(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஆ. மு. பொன்னுத்துரை, இரான்

கே: கற்குடாப் பிரதிநிதி திரு பொ. மாணிக்கவாசகரைப்பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன?

ப: நல்லவர், நேர்மையானவர். அடக்கமும் பணிவும் மிக்கவர். பெற்றுப் பெருகிய பெரும் குடும்பஸ்தர். நீர்ப்பாசன விவசாய விஷயங்களில் விற்பன்னர். தமிழரசுக் கட்சி ஒரு மந்திரிசபை அமைத்தால் காணி, காணி அபிவிருத்தி, விவசாய அமைச்சராகக் கடமை பார்க்கக்கூடிய தகுதிவாய்ந்தவர். அவருக்கு வேண்டப்படுவன: சுறுசுறுப்பு, ஒரு நல்ல கார், முன்வாய்ப் பற்கள்!

ஃ

அ. தவப்பிரகாசம், ஏழாலை

கே: யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரு வாரப் பத்திரிகை சமஷ்டிக் கட்சியைக் குறிப்பிடும் போதெல்லாம் 'சமட்டி, சமட்டி' என்று குறிப்பிடுகின்றதே, ஏன்?

ப: அரசியல் துறையில் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்குச் சரியான சம்மட்டி அடி கொடுத்து அவரை வீழ்த்திய கட்சியாகையால் அதை ஞாபகத்தில் வைத்திருப்பதற்காகச் சமட்டி சமட்டி என்று அப்பத்திரிகை எழுதுகிறது போலும்.

ஃ

எஸ். கதிரேசன், டிக்கோயா

கே: தமிழ் நாட்டில் பிழையில்லாமல் தமிழ் எழுதக்கூடிய ஒரு பத்திராசிரியர் யார்?

ப: பலர் இருக்கிறார்கள். இறந்தவர்களுள் திரு. வி. க.வையும் பேராசிரியர் கல்கியையும் குறிப்பிடலாம். இருப்பவர்களுள் குறிப்பிடத் தக்கவர் கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன். பிழையில்லாமல் தமிழ் எழுதுவதாகப் பீத்திக்கொள்ளும் தமிழ்வாணனின் எழுத்துக்களிலேயே அநேகம் இலக்கணப்பிழைகளும், எழுத்துப்பிழைகளும், கருத்துப் பிழைகளும் உள.

ஃ

செல்வி தனபாக்கியவதி, தெல்லிப்பழை

கே: ஆண்கள் பெண்களிடம் சீதனம் வாங்குவது ஏன்?

ப: சில பொறுப்பான பதவிக்கு விண்ணப்பம் போட்டால் ரொக்கமாக 'செக்யூரிட்டி' அதாவது பிணைப் பணம் கேட்கிறார்கள் அல்லவா? அது போலத்தான் சீதனமும். மனைவியென்ற பதவி பொறுப்பும் உத்தரவாதமும் வாய்ந்த பதவி தானே!

ஃ

செல்வி முத்துக்குமாரு, உடுப்பிட்டி

கே: மனிதன் காவி உடையிடம் சரணாகதி அடைவது எப்போது?

ப: மூன்று சந்தர்ப்பத்தில் சரணாகதி அடைகிறான்: ஞானம் முதிர்ந்த போது, மனைவி கட்டுக்கு மீறிய போது, பிழைப்புக்கு வேறு வழியில்லாத போது. மூன்றாவது வழியில் காவியைக் கட்டிக் கொண்டவர்கள் தாம் அநேகர்.

ஃ

செ. இரத்தினராசா, கொக்குவில்

கே: மிஸ் குயுக்தியாரைப் பார்க்க வேண்டுமே!

ப: பார்க்கலாமே. கட்டணம் ஐந்து ரூபாய்தான். அதாவது அவருடைய புகைப்படப் பிரதி ஒன்றின் விலை அது.

ஃ

எம். எஸ். செயினுல் ஆப்தீன், அலவத்தொட

கே: புரட்சி நடிகர் எம். ஜீ. ஆர். நடித்த படங்கள் ஏன் இலங்கைக்கு விரைவில் வருவதில்லை?

ப: படங்கள் இந்தியாவில் வெளியான உடனேயே இலங்கைக்கும் வந்து சேர்ந்துவிடுகின்றன. ஆனால் திரையிடப்படுவதற்குத்தான் இங்கு தாமதம் ஏற்படுகிறது. படத்தைத் தருவிப்பவர்கள் டப்பாவில் அடைத்துக் குளிர்ப்பெட்டியில் வைத்துக்கொள்கிறார்கள். நல்ல சந்தர்ப்பம் பார்த்து, அதாவது பெருநாட்களை யொட்டித்தான் திரையிடுகிறார்கள். இது ஒரு வியாபார தந்திரமாகும்.

ஃ

வை. நீலா, நயினாதீவு

கே: இந்தக் காலக் கல்லூரி மாணவிகள் சினிமாப் படங்களைப் பார்த்துவிட்டு அதில் வரும் நடிகைகளைப்போல் அலங்கரித்துக்கொள்கிறார்களே, அந்தக் காலத்துத் தமிழ்ப் பெண்களும் இப்படி ஆடம்பரமாக நடந்திருப்பார்களா?

ப: பெண்கள் எந்தக் காலத்திலும் ஆடம்பரமான அலங்காரப் பிரியர்கள் தானே அம்மா. ஒருத்தியைப் பார்த்து இன்னொருத்தி அலங்காரம் செய்துகொள்ளும் பழக்கம் அந்தக் காலத்திலும் இருந்தபடியால்தானே "கண்ட பாவனையில் கொண்டை முடித்தல்" என்ற பழமொழிவேறு தமிழ் மொழியில வழங்கி வருகிறது

ஃ

கெ. செல்வராசா, ஆவரங்கால்

கே: பெண்கடத்து வழக்குகள் யாழ்ப்பாணப் பகுதியில் தான் அதிகப்படியாக நடக்கக் காரணம் என்ன?

ப: இது ஒரு துக்ககரமான சம்பவந்தான். கோயில்கள் மலிந்து பக்தி பிரவகிக்கும் ஒரு பிரதேசத்தில் இப்படியும் நடக்கிறதே! காரணம் என்னவென்று ஆழமாகச் சிந்தித்தேன்: வயதுவந்த ஆண்களையும், பெண்களையும் யாழ்ப்பாணத்துப் பெற்றோர் அளவுக்குமீறி அடக்கி நடத்துவதுதான் இதற்குக் காரணம் என்று தோன்றுகிறது. கிராமங்களில் பெண்கள் பூப்பெய்தியது முதல் மணமாகும்வரை ஒரு சிறைவாசம் தானே செய்கிறார்கள். வயதுவந்த ஆண்களையும் பெண்களையும் ஓரளவு சரளமாகப் பழகவிட்டால் இந்த சாபத்தீடு குறையும் என்று ஒரு மனோதத்துவ சாத்திரி கூறுகிறார்.

ஃ

க. ஆறுமுகவேல், 344 டொக்யார்ட் வீதி, திருமலை

கே: கடந்த மாதம் 28ந் தேதி பிற்பகல் 4 மணியளவில் திருமலைப் பிரதிநிதி திரு என். ஆர். இராஜவரோதயம் சிவப்பு இலக்கம் பொறித்த 'டற்சன்' 3 சிறீ 3888 காரில் திருமலை வீதிகளில் ஒருமுறை பிரயாணம் செய்தார். மீண்டும் பிற்பகல் 5 மணிக்கு அதே காரில் பிரயாணம் செய்தார். பின்னர் புரக்டர் சம்பந்தரின் 2 சிறீ 5036 இலக்கமிட்ட காரில் டொக்யார்ட் வீதியில் மக்கள் கண்களில் தென்பட்டார். சிங்களப் பிரதேசத்தில் அவர் சிறீக் காரில் ஏறியிருந்தால் நாம் குறைகூற மாட்டோம். தமிழ்ப் பிரதேசத்தில், அவர் இப்படிச் செய்தது சரியா? தமிழரசுக் கட்சியின் பேச்சைக் கேட்டு நாம் அரசாங்கத்துக்கு தொடர்ந்து எதிர்ப்புக் காட்டி வருகிறோம். ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய அவசரம் ஏற்பட்டாலும் நாம் சிங்கள சிறீக் காரில் ஏறுவதில்லையென்று விரதம் பூண்டு காப்பாற்றி வருகிறோம். எங்கள் அருந்தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் இரத்தினபுரியிலுங்கூட சிறீக்காரில் ஏற மறுத்துவிட்டார் என்று பத்திரிகையில் செய்தி படித்திருக்கிறோம். இந்த நிலையில் நமது கட்சித் தலைவர் இப்படிச் செய்யலாமா? இதைப் பார்த்தால் தமிழரசுத் தலைவர்கள் இரகசியமாக சிங்களம் படிக்கிறார்கள் என்று திரு ஈ. எஸ். ஆர். எஸ். குமாரசாமி கூறுவது சரிதானோ என்று எண்ணத் தோன்றுகிறது. குயுக்தியாரே நீங்கள்தான் பதில் தர வேண்டும்.

ப: நீங்கள் கூறுவது எவ்வளவு தூரம் உண்மையென்பது எனக்குத் தெரியாது. ஆயினும் உங்கள் [illegible] விளக்கத்தைத் தரவேண்டிய பொறுப்பு இனித் தலைவர் இராஜவரோதயத்தைச் சார்ந்ததே

ஃ

க. த. ஜெயதேவன், கொழும்பு

கே: தங்களுக்குப் பகை உண்டா குயுக்தியாரே?

ப: உண்டு. புகை எனக்குப் பகை.

ஃ

வே. தம்பிப்பிள்ளை, இக்கினியாகலை

கே: உலகிலே மிகப் பெரிய ஆயுதம் எது? மிகச் சிறிய ஆயுதம் எது?

ப: உலகிலே மிகப் பெரிய ஆயுதம் உறுதி. மிகச் சிறிய ஆயுதம் தளர்ச்சி.

ஃ

வி. பி. கே; கிரேக்மோர்

கே: காதலிலே எத்தனை வகையுண்டு?

ப: இரண்டு வகைதான் உண்டு. ஒன்று கலியாணமாகாமல் ஏமாற்றத்தில் முடிவது மற்றொன்று கலியாணமாகி ஏமாற்றத்தில் முடிவது. எதிலும் முடிவு ஏமாற்றந்தான்!

ஃ

எஸ். கே. கே. ராஜ்குமார், மன்னார்

கே: தன் தந்தைக்கும் தன் கணவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டால் ஒரு பெண் எந்தப் பக்கம் நிற்க வேண்டும்?

ப: ஏன் இந்த வம்பு? குசினிப் பக்கம் நின்றுவிட்டால் நான் அவளைப் புத்திசாலி என்பேன்.

ஃ

த. சிவம், ஈவினை

கே: இந்த உலகில் தனம் தான் பெரியது என்கிறேன். சரியா?

ப: இல்லை. தனத்தைவிடத் தானம் பெரியது. அதைவிடப் பெரியது நிதானம்.

ஃ

விஜயா, கொழும்பு

கே: எழுத்தாளர்கள் சிலர் இலக்கியம் பொய் என்றும், சிலர் மெய் என்றும் வாதிடுகிறார்களே இதில் எது சரி?

ப: எழுத்தாளர்களில் இரண்டு வகையினர் உளர். ஒருசாரார் விளக்கெண்ணெய் எழுத்தாளர். இவர்கள் இலக்கியம் பொய் என்பர். மற்றொருசாரார் லாம்பெண்ணெய் எழுத்தாளர். இவர்கள் இலக்கியம் யதார்த்தம் என்பர். மூன்றாவது ஒருசாரார் இருக்கிறார்கள். அவர்கள் இந்த சலசலப்பு வாதத்தில் எல்லாம் நேரத்தைக் கரியாக்காமல் இலக்கியத்தைப் படைத்துக்கொண்டே இருப்பவர்கள். இவர்கள் தாம் உண்மையான எழுத்தாளர்.

## "கனவுப் பெண்"

கன்னியவள் கைவளையல் ஒலிக்க வந்தாள்
  கருமுகிலைக் கிழித்தெழுந்த அழகுமின்னல்
பொன்னிடையில் பொருந்திற்றே; பவளச் செவ்வாய்
  புது முல்லை மலர்ச் சரமோ?; போதைக் கண்கள்
விண்ணகத்துத் தாரகையோ?; நீலவானில்
  விதிவரும் முழு நிலவுப் பெண்ணோ இந்த
மண்ணகத்து வந்தனள்; என் மனதைக் கிள்ளி
  வம்பு செய்யும் பேரழகுப் பெண்தான் யாரோ?

விண்ணமுதைச் செவ்விதழில் தேக்கி வைத்து
  விஷத்தையுந்தன் புன்னகையில் மறைத்து; மின்னும்
கண்ணாலேன் கொல்கின்றாய்? கிட்டே வா உன்
  கை வைத்தென் நெஞ்சத்தைத் தொட்டுப்பார்; என்
எண்ணமெலாம் உன்னுருவாய் இனிக்கின்றாய் நீ
  எட்டியுமேன் போகின்றாய்? உன்னையன்றி
மண்ணில் நான் வேறெதையும் வேண்டேனென்றேன்
  வந்தென்னை அணைத்திட்டாள்; மடியில் சாய்ந்தேன்.

நெடுவானக் கடலிடையே நீந்திச் சென்றோம்
  நிலவுப்பெண் சிரித்தெம்மை வம்பு செய்ய,
பிடிவாதக்காரி இவள் ரோகிணிப் பெண்
  பிடித்தென்னை இழுத்தணைத்து ஆசைபொங்க
அடிவானப் பொற்சிவப்பு அதரம் தன்னால்
  ஆவலெல்லாம் தேக்கியொரு முத்தம் தந்தாள்;
கடிகாரம் மணியடித்து எழுப்பிற்றென்னைக்
  கண்விழித்தேன் "கனவுப்பெண்" மறைந்தேபோனாள்.

— மு. சுந்தரம்

விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கமும் குழுவினரும் (வரை.)

33, 3-ம் குறுக்குத்தெரு, கொழும்பு. | 450 பழைய சோனகத்தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

நவநாகரிக மங்கையர் விரும்புவது...






... ஓர் உஷா தையல் மெஷினேயே.

சோல் ஏஜென்டுகள்:
ரொஷு சன்ஸ் லிமிட்டெட்
89A., மெயின் வீதி,
கொழும்பு.

டெலிபோன்: 5060.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கடிதம்

# தமிழரசுக் கட்சியும் தமிழரும்

இம் மாத இறுதியில் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடக்கப் போவதாகக் கேள்விப்படுகிறோம். தமிழ்ப் பேசும் மக்களுக்கென ஒரு கட்சியுண்டென்றால் தமிழரசுக் கட்சியையே குறிப்பிடலாம். அக்கட்சி தோன்றிய காலந் தொட்டு இன்று வரை தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைக் காக்க அரும்பாடு பட்டிருக்கின்றது. ஆதலால் அக்கட்சி தமிழ்ப் பேசும் மக்களிடையே நன்மதிப்பையும் பெற்றிருக்கின்றது என்றும் கூறலாம். அம்மதிப்புக்கு இனிமேல் ஏதாவது பங்கம் ஏற்பட்டால் அது கட்சிக்குள்ளிருக்கும் ஒரு சில பாராளுமன்ற அங்கத்தினரின் விபரீதமான போக்கால் தான் என்று குறிப்பிடலாம்.

தமிழரசுக் கட்சியினரில் சிலர் மக்களின் மனதை மிகவும் கவர்ந்திருக்கிறார்கள். குறிப்பாகத் "தந்தை" செல்வர், "நல்லூர்" நாகநாதன், தோப்பாய் பாலசுந்தரம், துரைரத்தினம், இளைஞர் மசூர் மௌலானா முதலியோராவர். செந்தமிழ்ச் செல்வன் இராசதுரையின் குரல் இப்போ சில காலமாய்த் தமிழ் முழக்கம் செய்யாதது ஏனோ? தமிழினைஞரின் ஆர்வத்தைத் தட்டி யெழுப்ப வல்லவர் இவர். "அமரர்" வன்னியசிங்கம் உயிரோடிருக்கும் போது அவர் தமிழரை நல்வழிப் படுத்த பல முயற்சிகள் செய்து வெற்றியும் பெற்றார். இப்போ திருப்பவர்களில் ஒரு சிலர் கட்சியைத் தாங்கி மக்களை உசாரப்படுத்தாமல் உறங்குகின்றனர். வாய்ப் பேச்சு வீரர்களும் அடங்கிவிட்டனர். மக்களிடையே தமிழுணர்ச்சியைப் பரப்ப வேண்டியவர்கள் படுத்துக்கிடந்தால் தமிழர் கதியைச் சொல்லவும் வேண்டுமா?

தமிழரசுக் கட்சிக்கும் அரசாங்கத்திற்குமிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதாய் அறிகிறோம். பேச்சு வார்த்தைகளின் மூலம் எவ்வளவுக் கெவ்வளவு உரிமைகளைப் பெறலாம் என்பது பெரும் அவநம்பிக்கையாய் இருக்கின்றது. சிற்சில ஏமாற்று வித்தைகளைக் கையாண்டு தமிழரசாரை மடக்கி விடப் பார்க்கிறது அரசாங்கம். வடகீழ் மாகாணங்களுக்கு "நியாயமான அளவு ஆங்கில உபயோகம்" என்று பேச்சு அடிபடுகிறது. இந்த நியாயமான அளவு ஆங்கிலத்தால் எங்களைப் படுகுழியில் தள்ளப் பார்க்கின்றனர் அரசாங்கத்தவர்.

தற்காலிகமாக இச்சிறு சலுகையைப் பயன்படுத்தி இரண்டு மூன்று வருடங்களில் வடகீழ் மாகாணம் அல்லாத இடங்களில் வேலை பார்க்கும் தமிழர் சிங்கள அறிவு பெற்றவுடன் வடகீழ் மாகாணங்களுக்குள்ளேயும் சிங்களத்தைப் புகுத்தி விடுவார்கள். பின்பு தமிழெங்கே? தமிழனெங்கே? எதிர்ப்புச் சக்தி குன்றிய தமிழரை நசுக்கியே விடலாம்.

இப்பொழுது தமிழருடைய ஆன்மபலமும் எதிர்ப்புச் சக்தியும் ஓரளவுக்கிருக்கின்றன. கட்சி பலமும் இருக்கின்றது. சில தற்காலிக சலுகைகளைக் கையாண்டு இரண்டு மூன்று வருடத்தில் தமிழரின் பலததை முறியடித்து விட்டால் தமிழர்கள் எதையும் எதிர்க்கச் சக்தியற்றவராவார்கள். சிங்களம் வடகிழ் மாகாணங்களில் சிங்காரத் தாண்டவமாடும்.

பேச்சு வார்த்தைகள் நடத்தும் தமிழரசார் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பாடசாலைகள் பறிபோய் விட்டன. சிங்களத்தைப் பாடசாலைகளுக்குள் புகுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். "வருமுன் காப்போம்" என்னும் முதுமொழியை மறந்து "வந்தபின் பார்ப்போம்" என்னும் புது மொழியை நம்பி இராமல் எதிர்ப்புச் சக்திகளைத் திரட்ட வேண்டும்.

வருடாந்த மகாநாட்டில் தமிழ் பேசும் மக்கள் இனி யாது செய்ய வேண்டும் என்பதை தெளிவுறுத்த வேண்டும். பேச்சு வார்த்தைகளால் அடைந்த பயனை விளக்க வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்க இரகசிய ஒப்பந்தங்கள் வைத்திருக்கின்றோம் என்று இனிமேலும் கூற வேண்டாம். "ஏமாந்த சீமான்" தமிழன் என்ற "பேய்ப்பட்டம்" நமக்கினி வேண்டாம். தமிழரை ஒடுக்கும் சக்திகள் ஒன்று சேர்ந்து புயல் வேகத்தில் தாக்க வருகின்றன. இனியும் தாமதம் வேண்டாம் தலைவர்களே. துயில் நீத்தெழுந்து (தமிழரசுக் கட்சிக்குள்ளிருக்கும் ஒரு சில அங்கத்தினரையே குறிப்பிடுகிறேன்) தமிழ் காக்கப் பறப்படுங்கள் 'சீற்' (Seat) கிடைத்து விட்டதெனக் குந்திக் கொண்டிருக்கலாம், "தந்தையின்" மதிப்பு எம்மைக் காக்கும் என்று நம்பி இராதீர்கள். தந்தையிடம் எவ்வளவு மதிப்பிருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கட்சி பாரத்தைத் தாங்காமலும், பொறுப்புணர்ச்சியில்லாமலும் அலையும் அங்கத்தினர்கள் மேல் நமக்கு அதிக ஆத்திரம் உண்டு.

தை முதலாந் தேதிக்கு முன் தமிழரின் நிலையை தமிழரசார் விளக்கிக் கூற வேண்டும். வடகீழ் மாகாணங்களில் பல இடங்களுக்கும் சென்று தமிழரின் நிலையை விவரிக்க வேண்டும். எதிர்ப்புக் காட்ட அவசியம் வந்தால் எவ்வாறு எதிர்க்க வேண்டும், எப்போ எதிர்க்க வேண்டும் என மக்களுக்கு அறிவிக்க வேண்டும் சும்மா இருந்தால் சுமை நீங்காது. தமிழருக்கென ஒரு கட்சி இருந்தும் சிங்களத்தைப் புகுத்தி விட்டோம் என பெரும்பான்மையினர் பறைதட்ட இடம் வைக்க வேண்டாம். தலைமறைவாய் இருந்து மக்களின் முன் வராமல் காரியங்களைச் சாதிக்க முடியாது. தமிழர் என்ன செய்ய வேண்டும் எனக் கட்டளை இட்டவுடன் கடமையைச் செய்யப் பலர் காத்திருக்கிறார்கள். தலைவர்கள் மட்டும் படுத்துறங்கியும் சிங்கள அரசாங்க மந்திரிகள் வரக் குதித்தெழும்பி வரவேற்கவும் போகாமல் தத்தமது கடமைகளைச் சரவரச் செய்தால் தமிழர் வெற்றி பெறுவார்கள். உரிமை காக்கத் தெரியாத தலைவர்களை (ஒரு சில தமிழரசு அங்கத்தினர்) தேர்ந்தெடுத்து என்ன பயன்? செய்கை

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

## தமிழுரிமை பெறுவதற்கு போராட்டமே தேவைப்படுகிறது

இன்று தமிழர்கள் ஒவ்வொருவருடைய உள்ளமும் சந்தேகத்தாலும் கவலையாலும் வருந்துகின்றது அடுத்த ஆண்டு தொடக்கம் தமிழுக்கு என்ன நடக்கப் போகிறது? தமிழ் இழந்த உரிமையைப் பெற்று இந்நாட்டில் வாழுமா? தமிழ் பேசும் மக்கள் நிறைந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களிலாகுதல் தமிழ் நிருவாக மொழியாக நிலைக்குமா? சிறுபான்மையினருக்கு நீதி செய்வோமென்று கூறின அரசாங்கம் இதுவரை உருப்படியாக ஒன்றையும் செய்யக் காணவில்லையே! இனிச் செய்யுமென்பதற்கும் போதிய அறிகுறிகள் தோன்றவில்லையே! யாழ்ப்பாணத்தைத் தரிசிக்க வந்த அமைச்சர்கள் "நேசக் கரம் நீட்டுகிறோம் பிடியுங்கள்" எனறார்கள். சிங்களச் சட்டமும் தமிழ்ச் சட்டமும் ஒன்றாக நடைமுறையிற் கொண்டு வரப்படும்" என்றார்கள். ஆனால் இப்பொழுது நடப்பவற்றைப் பார்த்தால் அமைச்சர்களின் வார்த்தைகளெல்லாம் ஆசை வார்த்தைகளாகத் தோன்றுகின்றனவே.........இவ்வாறு தமிழ் மக்கள் யாவரும் எண்ணியெண்ணிச் சந்தேகப்படுகிறார்கள்.

### போராட்டம் ஏன்?

தமிழர்கள் யாவரும் 'அப்படி என்ன ஏமாந்த சோணகிரிகளாகி விடுவார்களா? போராட்டமின்றித் தமிழுரிமையைப் பெற முடியாதா? என்று கவலைப்பட வேண்டிய நிலைமை உருவாகிக் கொண்டு வருகிறது என்பதை இனி எவரும் மறுக்க முடியாது. இதற்கு உரிய காரணங்களிற் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறோம்.

### பேச்சுவார்த்தையில் விஷம

(1) சிங்களம் மட்டும் சட்டத்தையும் தமிழ் (விசேட) சட்டத்தையும் நடைமுறையிற் கொண்டு வரும் பொறுப்பு இப்பொழுது நீதி அமைச்சர் சாம் பி. சி. பெர்னாண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் இப்பொழுது மூச்சு விடக்கூட நேரமின்றி சிங்களச் சட்டத்தை எவ்வாறு அமுலாக்கலாமென்று அரசாங்க அலுவலகங்களின் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறாராம் இப்பேச்சுவார்த்தைகளில் அரசகருமமொழி இலாகாத் தலைவர்களும் அமைச்சரும் தெரிவிக்கும் கருத்துக்கள் அவர்கள் தமிழுக்கு எவ்வித இடமும் கொடுக்கப் போவதில்லை என்பதைத் தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றனவாம். சிங்களப் பத்திரங்கள் முதலியவற்றைத் தமிழர்கள் ஏற்க மறுத்தால் ஆங்கிலத்திலுள்ள பத்திரங்கள் முதலியவற்றைக் கொடுக்குமாறு அறிவுரை கூறப்படுகிறதாம்.

### தமிழ்ச் சட்டம்

(2) தமிழ்ச் சட்டத்தின் கீழ்ப் பிரமாணங்களை ஆக்குவதில் தமிழரசுக் கட்சியின் ஆலோசனையோடு அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகக் கதை பரவியுள்ளது இந்தப் பிரமாணங்கள் அரசகரும மொழி இலாகாத் தலைவர்களின் கைக்குப் போன பொழுது அவர்கள் இவற்றை சிங்களத் தீவிர வகுப்புவாதிகளாகவுள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் காட்டினார்களாம்; இவற்றைப் பாராளுமன்றத்தில் நிறைவேற வொட்டாமல் தடுப்பதற்கு வேண்டிய சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றனவாம்.

### நீதிமன்ற மொழிச் சட்டம்

(3) பாராளுமன்றத்தில் அணிமையில் சமர்ப்பிக்கப்பட்ட நீதிமன்ற மொழிகள் பற்றிய சட்டத்தில் தமிழுக்கு எவ்த இடமும் அளிக்கப்படவில்லை. இது அரசாங்கத்தின் போக்கை அம்பலப்படுத்துகிறது. இதனைத் தமிழ் வழக்கறிஞர்கள் தெளிவாக எடுத்துக் காட்டிக் கண்டித்திருக்கிறார்கள்.

தமிழுக்குப் போதிய உரிமை கிடைக்காது என்று சந்தேகப்படுதற்கு இன்னும் பல காரணங்களுள. அவற்றை அடுத்தமுறை எடுத்து விளக்குவோம் இனியும் அரசாங்கத்தை நம்பிக் கண்மூடி மௌனிகளாய்த் தமிழர்கள் இருப்பின் இலவு காத்த கிளிகள் போல ஏமாந்து போகமாட்டார்களா?

அரசாங்கக் கட்சியின் சிங்களப் பத்திரிகையாகிய "சிங்களே" என்பது அரசாங்க இலாகாக்களிலுள்ள தமிழ் உத்தியோகத்தர்களைப் பற்றிக் குத்தலாகவும், கிண்டலாகவும், பழிப்பாகவும் எழுதியிருக்கும் செய்திகள் பலவற்றைத் தமிழியக்கத் தொண்டர்கள் மொழி பெயர்ப்பித்து அனுப்பியிருக்கிறார்கள். இவற்றையும் பின்னர் வெளியிடுவோம்.

### சூழ்ச்சிகள்

தமிழர்களையே பிரித்துத் தமிழர்களின் எதிர்ப்பைச் சிதைத்து விடுதற்கும் பல சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. யு என். பி.யின் தூணாக விளங்கிய திரு நடேசனின் வேண்டுகோளைப் பொருட்படுத்தினார் போல் காட்டி இந்துப் பல்கலைக்கழகம் ஒன்றைக் கொடுக்கப் போவதாக வெளிவந்த செய்தி இச் சூழ்ச்சிகளில் ஒன்றாகும். அரசாங்கம் பொறுப்பேற்ற தமிழ்ப் பாடசாலைகளிலெல்லாம் சிங்களம் படிப்பித்தற்கு சிங்கள ஆசிரியர்களை நியமித்தற்கும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றனவாம். இத்தகைய சூழ்ச்சிகளுக்கெல்லாம் இடங் கொடுக்காமல் தமிழையும் தமிழினத்தையும் காக்க வேண்டியது தமிழியக்கத் தொண்டர்களின் தலையான கடனாகும். எனவே ஆயிரக்கணக்கில் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேருமாறு தமிழ்ப் பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுகிறோம்.

### தொண்டர்களாகச் சேருங்கள்

தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர்தற்கு நீங்கள் செய்ய வேண்டியது 3 சதத்திற்கு ஓர் அஞ்சல் அட்டையை வாங்கி அதில் உங்கள் பெயர், வயது, தொழில், முகவரி முதலியவற்றை எழுதிக் கையொப்பமிட்டு தமிழ் இயக்கம் மே/பா சுதந்திரன் த. பெ. 1183 கொழும்பு-12 எனும் முகவரிக்கு அனுப்புவதே.

## புங்குடுதீவில் போட்டிகள்

—:—

புங்குடுதீவிலுள்ள பாடசாலை மாணவ மாணவிகளுக்கான கட்டுரை, பேச்சு, தர்க்கப் போட்டிகளைத் தமிழர் திருநாளான தைப்பொங்கலன்று நடத்துவதற்கான ஏற்பாட்டைக் கொழும்பிலுள்ள புங்குடுதீவு இளைஞர்கள் செய்து வருகிறார்கள். போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு புங்குடுதீவில் நடைபெறவிருக்கும் பொங்கல் பொதுக்கூட்டத்தில் பரிசில்கள் வழங்கவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறுகின்றன. தர்க்கப் போட்டியில் பிரிவுகள் இல்லை.

கட்டுரைப் போட்டிக்கான முடிவு தேதி 10-12-60 எனவும் பேச்சு, தர்க்கப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் தேதி 20-12-60 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது கட்டுரைகளும் விண்ணப்பங்களும் [illegible] முகவரி:— திரு. [illegible] தனிசிங்கம், இல. 52, செக்கடித்தெரு, கொழும்பு-13.

## அகில இலங்கை பேச்சுப் போட்டி

அரசினர் முஸ்லிம் ஆசிரியர் சங்கம் இலங்கையிலுள்ள எல்லா முஸ்லிம் பாடசாலைகளும் கலந்து கொள்ளக்கூடிய வகையில தமிழ் இலக்கியப் பேச்சுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.

அரசினர் முஸ்லிம் ஆசிரியர் சங்கக் காரியதரிசி, ஜனாப். எம். எஸ். எம். தாஹிர் இது பற்றிக் கூறியதாவது:—

"நாம் இவ்வாறான ஓர் இலக்கியப் பேச்சுப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளமையை ஏராளமான ஆசிரியர்கள் பாராட்டுகின்றனர். கல்வி மந்திரியை தலைமை வகிக்கும்படி வேண்டுதல் விடப்படும். இப்பேச்சுப் போட்டி, சிரேஷ்ட, கனிஷ்ட, 16 வயதுக்கு மேற்பட்ட, 16 வயதுக்கு உட்பட்ட என இரு பகுதிகளையுடையது. ஒவ்வோர் முஸ்லிம் பாடசாலையும் மொத்தம் இரண்டு மாணவர்களை பங்குபற்ற விடலாம். மாகாணவாரியாகவும், கண்டியில் இறுதி தெரிவும் நடைபெறும். பெறுமதியான பரிசில்களும் தராதரப் பத்திரங்களும் வழங்கப்படும். இவ்விடயத்தைச் சகல பாடசாலைகட்கும் அறிவித்துள்ளோம்"—இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்கள், எழுத்தாளர்கள் 'எங்கிருந்தாலும்

## கலைஞர்கள், எழுத்தாளர்கள்தாம்

## அவர்களைக் குறுகிய பிரதேச எல்லைகளுக்குள் அடக்கிப் பார்ப்பதும் அலட்சியப் படுத்துவதும் கூடாது

## மொழி பெயர்ப்புத் தலையங்கங்கள் எழுதுபவர்கள் கூட கலை இலக்கியம் பற்றிப் பேசுகிறார்களே—விந்தை

## எழுத்தாளர் கூட்டத்தில் கருத்து

"கலைஞர்கள், எழுத்தாளர்கள் எங்கிருந்தாலும் கலைஞர்கள் எழுத்தாளர்கள்தாம். அவர்களைக் குறுகிய பிரதேச எல்லைகளுக்குள் அடக்கி எடை போடுவது கூடாது; அலட்சியப்படுத்துவது ஆகாது. நல்ல எழுத்தாளர்கள், கலைஞர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும்—எங்கிருந்து வந்தாலும் அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்; ஊக்கம் கொடுக்க வேண்டும்; மதிப்புத் தர வேண்டும்"

மேற்கண்டவாறு திரு கே. எஸ். நடராஜா கூறினார்.

தமிழகத்துக் கதை எழுத்தாளர்களில் ஒருவரான திரு நா. பார்த்தசாரதிக்கு இலங்கையில் (கொழும்பில்) உள்ள எழுத்தாளர்களை ஒரளவு அறிமுகப்படுத்தி வைக்க எண்ணி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடந்த வாரம் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. அதற்குத் திரு எப். எக்ஸ். ஸி. நடராஜா தலைமைதாங்கினார். பிரஸ்தாப கருத்தரங்கத்தில் பேசுகையிலேயே திரு கே. எஸ். நடராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

### பிரதேச எல்லைக் கோடு வேண்டாம்

திரு நடராஜா தொடர்ந்து பேசுகையில் இலங்கை வானொலிபற்றி ஒரு வட்டாரத்தில் துஷ்பிரசாரம் செய்யப்படுவதோடு அதன்மீது வீண்பழி சுமத்தப்படுவதாகவும் கூறி உண்மை நிலையை விளக்கப் புகுந்தார். அவர் சொன்னார்:—

"திருச்சி அவருக்கும் திருச்சி இவருக்கும்தான் இலங்கை வானொலியில் இடமளிக்கப்படுவதாகச் சிலர் குறைகூறுகிறார்கள். திருச்சியென்ன, சீனவில் இருந்து இலங்கை வானொலிக்கு நல்ல படைப்புகள் அனுப்பப்படுமானல் அவை கூட ஒலிபரப்பப்படும் கலைஞர்களை; எழுத்தாளர்களைக் குறுகிய பிரதேச எல்லைகளுக்குள் அடக்கிப் பார்ப்பது சரியல்ல. கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஓர் குலம். எங்கு இருந்தாலும் அவர்கள் ஓரினம். அவர்களுக்குள் பாகுபாடு காட்டக்கூடாது.

### வீட்டுக்கொரு நிகழ்ச்சியா?

"இதை விட்டுவிட்டு குறுகிய புத்தியில எல்லைக்கோடுகளைப் போட்டுக் கலைஞர்கள் எழுத்தாளர்களைக் கூறுபடுத்தினல் என்ன மிஞ்சப் போகிறது? அப்படி இலங்கை வானொலி சம்பந்தப்பட்டமட்டில் செய்யப் போனல் கடைசியில் ஒவ்வொருவருடைய வீட்டுக்கும் அந்த அந்த வீட்டு ஆட்களைப் பிடித்து நிகழ்ச்சிகள் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகலாம்.

### அவல நிலை

"இது வேடிக்கையாக முடியும். இன்னெரு விஷயம். அது வேடிக்கையானது மட்டுமல்ல; வேதனைக்குரியதுங்கூட. இந்த நாட்டின் அவல நிலை: சாடக்கேடு மொழி பெயர்ப்புத் தலையங்கங்களை எழுதிப் பழக்கும் பத்திரிகை ஆசிரியர்கள் கூடக் கலை, இலக்கியம்பற்றி எல்லாம் பேசப் புறப்பட்டுவிட்டார்கள். இது விந்தை. தம்மைத்தாமே புரிந்துகொள்ளாத இந்தப் பேர்வழிகள் இலக்கியம் தமது காலடியில்தான் குடியிருக்கிறது என்ற கருத்தில் தலைகால் தெரியாமல் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். இந்த நிலை நீடிக்குமானல் வீணேதான் விளையும்; இலக்கியம் வளராது"—இவ்வாறு திரு நடராஜா கூறி முடித்தார்.

### மூன்றுவகை எழுத்தாளர்கள்

திரு கி. லக்ஷ்மணன் பேசுகையில் திரு நா. பார்த்தசாரதியின் புலமையை எடுத்துரைத்து அவருக்குப் பாராட்டு வழங்கினார். அவர் சொன்னார்:—

"இப்போது எழுதுபவர்களில் சிலர் இந்தக்காலத்துக்கு உரியவர்களாக இல்லை. பழமையில் நின்று பழமையில் திளைத்து, பழமை மிளிர எழுதுகிறார்கள். இவர்கள் ஒரு வகையினர். இன்னெரு வகையினர் முழுக்க முழுக்க இந்தக் காலத்துக்கு உரியவர்கள்! பழமையை அடியோடு அறியாதவர்கள். புதுமை புதுமை என்று ஏதேதோ எழுதுகிறார்கள் மூன்றுவது வகையினர் இரண்டு காலங்களையும் இணைப்பவர்களாக இருப்பவர்கள். அதாவது பழமையை நன்கு அறிந்து வைத்துக்கொண்டு புதுமை இலக்கியம் படைக்கிறார்கள் இதுதான் சிறப்பு. இந்த மூன்றுவது வகையைச் சேர்ந்தவர்தான் திரு பார்த்தசாரதி. நல்ல எழுத்தாளர்" என்றார் திரு லக்ஷ்மணன்.

### பார்த்தசாரதியின் குறுக்கீடு

ஒவ்வொருவரும் பேசும்போது திரு பார்த்தசாரதி இடையில் குறுக்கிட்டு, இருந்த இருப்பிலேயே குறிப்புரைகள் சொல்லிக் கொண்டு வந்தார். சில குறிப்புரைகள் நகைச்சுவை தருவனவாகவும் இன்னும் சில பேசியவர்களையும் கேட்டுக்கொண்டிருந்தவர்களையும் நையப்புடைப்பனவாகவும் இருந்தன.

### தமிழ்நாட்டுப் பண்பு!

திரு தர்மதாஸ் என்பவர் பேசும்போது 'தினத் தந்தி'யில் 'கல்கி'யில் எழுதப்படும் ஈழம் சம்பந்தமான தலையங்கங்களையும் "இலங்கை கடிதப் பகுதி"யையும் கண்டித்தார். திரு பார்த்தசாரதி ஏதோ சொல்லப் புகுந்தும் பேசிக்கொண்டிருந்த திரு தர்மதாஸ் "இதுதான் உங்கள் தமிழ்நாட்டுப் பண்போ?" என்னுடைய பேச்சில் நீங்கள் குறுக்கே விழுந்தடிக்கத் தேவையில்லை" என்றார். திரு பார்த்தசாரதியின் முகம் மாறியது. கடுகடுப்பு கொப்பளித்தது. என்றாலும் அவர் அதற்குப் பின்னரும் தமது குறுக்கீடுகளைக் கைவிடவில்லை. திரு பார்த்தசாரதியின் குறுக்கீடுகளை ஒழுங்கற்றவை என்று தலைவரும் ஒரு முறை கண்டித்தார். "கூட்டம் ஒழுங்காக நடந்தால், நீங்கள் முறையாக இருந்தால் அல்லவோ மற்றதெல்லாம்" என்றார் திரு பார்த்தசாரதி. இந்தச் சுடு சொல்லுக்குப் பின்னரே தலைவர் உஷாரானார். பேச்சாளர்களைப் பெயர் சொல்லி அழைத்துப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

### கூட்டம் திசை மாறியது

ஆனல் இந்தக் கட்டத்துக்கு முன்னரே கூட்டம் திசை மாறத் தொடங்கிவிட்டது எனலாம். திருச்சி பாலையா என்பவர் பேசுகையில் யாழ்ப்பாணத்தவர்களைத் திட்டினார். ஈழத்தில் மும்மொழிகளிலும் பத்திரிகைகள் வெளியிடும் பெரிய ஸ்தாபனத்துத் தமிழ்த் தினசரிக்கு வசை புராணம் பாடினார். இந்தப் பத்திரிகை குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கே இடமளிப்பதாகவும் மலைநாட்டு எழுத்தாளர்களைப் புறக்கணிப்பதாகவும் குற்றஞ்சாட்டினார். சில எழுத்தாளர்கள் கலைஞர்களுக்கும் தமது பாணியில் அர்ச்சனை செய்தார். எழுத்தாளர்—கலைஞர் பிரச்சினையோடும் இலக்கியத்தோடும் நின்ற கூட்டம் இந்தக் கட்டத்தில் விரிவடைந்து பக்கவாட்டிலும் ஓடி ஆளுக்காள் ஏச்சு, வக்கரிப்பு, வரிந்து கட்டல் முதலான விரும்பத்தகாத துறைகளையெல்லாம் அடைந்தது. விளைவு கட்டுக்கடங்காத நிலைமை

### தலைவர் அவஸ்தை

ஒரு கட்டத்தில் தலைவர் ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தார். "கூட்டத்தில் அமைதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லையானல் என்னல் இருந்து தலைமை வகிக்க முடியாது" என்று சொன்னார். நிலைமை சிறிதளவு சீரடைந்தது.

### தரகு வேலையும் கடுகடுப்பும்

கூடியிருந்த எழுத்தாளர்களைத் தமக்கு அறிமுகம் செய்து வைக்கும்படி திரு பார்த்தசாரதி வாய்விட்டுக் கேட்டார். அதன்பேரில் அந்தப் பணியைச் செய்ய முன்வந்தார் திரு செல்வராஜன்.

"வருகை தந்திருக்கும் தமிழகத்து எழுத்தாளருக்கு இங்கு கூடியிருக்கும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் 'தரகு' வேலை எனக்குத் தரப்பட்டிருக்கிறது......" என்று அவர் தொடங்கினார். அப்போது திரு பார்த்தசாரதி குறுக்கிட்டு, "இங்கே நாம் என்ன வியாபாரமா நடத்துகிறோம் தரகு வேலை பார்ப்பதற்கு? எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தச் சொன்னல் இப்படிப் பிழையான வார்த்தைப் பிரயோகமா...?" என்று கடுகடுத்துக் கேட்டார். திரு செல்வ

(9-ம் பக்கம் பார்க்க)

### நாவலர் விழா

—:—

விவேகானந்த சபையில்

ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தையொட்டி இம்மாதம் 9, 10, 11ந் தேதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) அன்னருக்கு விழாவெடுக்கக் கொழும்பு விவேகானந்த சபை ஏற்பாடுகள் செய்து வருகிறது. சபை மண்டபத்தில் விழா நடைபெறும்.

தமிழகத்திலும் ஈழத்திலுமுள்ள பல தமிழறிஞர்களும் சைவாபிமானிகளும் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றவிருக்கிறார்கள். தமிழகத்திலிருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் மகா வித்துவான் திரு எஸ். தண்டபாணி தேசிகர் வருகிறார்.

விழாவில் நாவலர் பேச்சுப் போட்டி, ஏழைகளுக்கு உணவளித்தல், பக்திப் பாடல்கள் முதலான பல நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

"உள்ளத்தையே கொள்ளை கொண்ட ஓவியம் நீயே,
கலை வெள்ளத்திலே நீந்தி வரும் காவியம் நீயே!! ..."

என்று உங்கள் அழகைப்
போற்ற வைக்க
இன்றே அணியுங்கள்
எலீட் சுப்பர்லோன்
ஜோர்ஜெட்



இது,
கண்ணைப் பறிக்கும் அழகு மிக்க மங்காத
ஹை-பை நிறங்களிலும்; நங்கையர் விரும்பும்
நல்ல நவீன டிசைன்களிலும்; குறைந்த விலையிலும்
எங்கும் கிடைக்கும்.

சாரியின் விலை ரூ. 19-80

ஒவ்வொரு ஞாயிறுக்கிழமை மாலை
நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை
இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில்
குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும்
மாலைகீதம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி. கொழும்பு. மொத்த வியாபாரப் பகுதி: 26, கெய்ஸர் வீதி.

—Mylads 737/60—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் சேமலாப நிதிக்கு அரசாங்கம்

## அரைக்காசு கூட அளியாது

## அதில் உரிமை கொண்டாடுவது அடாத்து

—டாகடர் நாகநாதன்

இலங்கை பஸ் போக்கு வரத்துச் சேவை நஷ்டத்தில் 'ஓடுகிறது' என்கிறது இ போ ச; பஸ் போக்குவரத்துத் தேசிய மயமாக்கப்பட்டு இரண்டு வருடங்கள் முடியப்போகின்றன. இன்னும் ஒரு ஸ்திரமான நிலையைக் காணேம். பஸ் பிரயாணிகள் முணு முணுப்பு அதிகரித்துக் கொண்டே போகிறது. பஸ் சாரதிகள், கண்டக்டர்கள் ஆகியோரில் ஒருசிலர் தாம் பொதுமக்களின் ஊழியர்கள் என்பதை இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்தத் தருணத்தில் இ. போ. ச.வின் உள் அரங்கம் எப்படியிருக்கிறது என்று ஒருமுறை இங்கு எட்டிப் பார்த்துவிடலாம்.

—0—

### இ.போ.ச.'தலை'களுக்கு ஏன் இவ்வளவு சம்பளம்?

சொல்மன்டலி குணவர்தன: (ல. ச. ச. கட்சி)......இப்பொழுது இ. போ. ச.வில் உப-தலைவராயிருக்கும் சிவில் சேவை ஊழியர் (Civil Servant) மாதம் ரூபா 3000 ஊதியம் பெறுகிறார்.

ஜே. ஆர். ஜெயவர்தன: (இல்லை, இல்லை!) ரூபா 4000/-

டாக்டர் என். எம். பெரேரா: உப-தலைவர் இன்னும் சிறிது

〰〰〰〰〰

அவைப் புரு

〰〰〰〰〰

குறைவாகத்தான சம்பளம பெறுகிறார்.

ஜெயவிக்கிரமா ரூபா 2500/-

சொல்மன்டலி: இ. போ. ச.வின் பிரதம கணக்காளர் (Chief Accountant) பிரதம அரசாங்கக் கணக்குப் பரிசோதகர் (Auditor General) லும் பார்க்க உயர்ந்த சம்பளம் பெறுகிறார். உப-பிரதம கணக்காளரின் சம்பளம் அரசாங்க உப-பிரதம கணக்குப் பரிசோதகரின் (Deputy Auditor-General) சம்பளத்திலும் பார்க்க மிகக் கூடியது. இருந்தும் பிரதம அரசாங்க கணக்குப் பரிசோதகர்தான் இவர்கள் சமர்ப்பிக்கும் கணக்குகளைப் பரிசீலித்துத் தாப்பளிக்க வேண்டியவர்! (வேடிக்கை இல்லையா இது?)




### சம்பளப் பட்டியல்

எங்கள் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறுகிறதில்லை. நாட்டில் பணமுடை ஏற்பட்டிருக்கிறது; வெளிநாட்டுச் சேமிப்புகள் வீழ்ச்சியடைகின்றன. இ. போ. ச. நஷ்டத்தில் 'ஓடுகிறது,' இந்த இலட்சணத்தில் நாட்டின் பொருளாதாரம் இந்தப் பெரிய சம்பளப் பட்டியலைத் தாங்க முடியுமா? இ. போ. ச.விலிருந்து இலாபம் கிடைக்கிறது என்றுங் கூட இது கட்டுமானமாகுமா?

### மோட்டாரும் ஸ்கூட்டரும்

உயர் அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் டாம்பீகமான 'லிமொசீன்' மோட்டார் கார், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு 'போட் செபீர்' (Ford Zephyr) 'போட் ஆங்கிலியா' (Ford Anglia). ஓட முடியாத ஒரு வாகனமோ? அல்லது, நீதி மந்திரி உபயோகிப்பது போல ஏன் ஒரு 'மொறிஸ் மைனர்'ரைப் (Morris Minor) பாவிக்க முடியாது?......ஒரு அரசாங்க அதிபர் தனது கடமைகளைப் புரிவதற்கு ஒரு ஜீப் பாவிக்க முடியுமானல், இ. போ. ச. அதிகாரிகள் ஏன் ஒரு ஜீப் பாவிக்க முடியாது? அல்லது ஏன் ஒரு 'ஸ்கூட்டரை'ப் (Scooter) பாவிக்க இயலாது?.........

### மத்திய வேலைத்தலம்

இன்னும் மத்திய வேலைத் தலத்தில் (Central Workshop) இரண்டு கோடி பெறுமதியுள்ள பொருட்கள் கையிருப்பில் இருக்கின்றன.

**பாராளுமன்றத் துணுக்குகள்...**

பழுதுபடும் பஸ் வண்டிகளைத் திருத்துவதற்குப் பாவிப்பதற்காக துண்டுப் பகுதிகள் இங்கே வேண்டிய அளவு இருக்கின்றன! இருந்தும் பழுது பார்க்கப்படாது சுமார் 200 அல்லது 300 பஸ் வண்டிகள் கிடந்து துருப்பிடிக்கின்றன! எந்த ஒரு சிறு பழுதானலும் பஸ் வண்டிகள் எல்லாம் இங்கே தான் இழுத்து வரப்படுகின்றன. வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்திலிருந்தும் சரி, தெற்கிலுள்ள காலியிலிருந்தும் சரி, களுத்துறையிலிருந்தும் சரி, எந்த பஸ் வண்டியும் இங்கேதான் கொண்டு வரப்படுகிறது! ஏன் இந்த விரயம்?

ஃ

தொழிலாளர் உரிமைபற்றிப் போராடுவது எந்த ஒருவரினதும் தனிச் சொத்து அல்ல. தமிழரசுக் கட்சிக்குத் தொழிலாளர் நலனில் அக்கறை இல்லை என்று இடதுசாரிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். உண்மை என்ன?

**தொழிற் பகுதி மான்ய விவாதம் 29-9-60;**

டாக்டர் நாகநாதன்: (தொழிலாளர் சேம நிதிபற்றி); ஒரேயொரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர் சேமநிதியில் இருக்கும் பணம் தொழிலாளி முதலாளி ஆகிய இருவரிடம் மாத்திரமிருந்தே இப்பொழுது கிடைக்கிறது. இந்த நிலைமை ஒழிய வேண்டும். அரசாங்கம் இந்த நிதியில் ஏதும் உரிமை பாராட்டுவதாயிருந்தால், அரசாங்கமும் இந்நிதிக்கு உதவும் ஒரு

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சிப் புலவர்களின் 25-வது உலக மாநாடு:

# தமிழ் படிக்கிறார்கள்; தமிழ் ஆராய்ச்சி நடத்துகிறார்கள்; தமிழ் நூல்கள் எழுதுகிறார்கள் சோவியத் மக்கள்

## தமிழறிஞர்களாக மாறி விட்டவர்கள் தமிழ்ப் பெயர்களை வைத்திருக்கிறார்கள்

## ஜெர்மனியிலிருந்து வந்த பிரதிநிதி வெளியிட்ட முக்கியமான தகவல்

(2)

கீழை நாட்டியல் ஆராய்ச்சிப் புலவர்களின் 25-வது உலக மாநாட்டு நிகழ்ச்சிகள் பெரும்பாலும் உருசிய மொழியிலும், ஆங்கில, பிராஞ்சிய மொழிகளிலுமே நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாநாட்டின் பல பிரிவுகளில் ஆங்கிலமே முதலிடம் பெற்றது. இந்திய ஆராய்ச்சிப் பகுதியில ஏறக்குறைய முழு உரையாடலும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. இப்பகுதியிற் கலந்து கொண்ட உருசிய அறிஞர்களும் போதிய ஆங்கில அறிவுடையவர்களாயிருந்தனர்.

பிரதிநிதிகளிற் பலர் தங்கள் உரைகளை அச்சிட்டுப் பலருக்குங் கொடுத்தனர். மாநாட்டின் பல பிரிவுகளிலும் பங்கு கொண்டு உரை நிகழ்த்திய உருசிய அறிஞர்களிற் பெரும்பாலானோர் தங்கள் உரைகளை ஆங்கிலத்தில் எழுதி அச்சிட்டுக் கொணர்ந்து யாவருக்கும் வழங்கினர், இம் மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரைகள் யாவும் மாநாட்டு அறிக்கையுடன்சேர்த்து அச்சிட்டு வெளியிடப்படும்.

### கலை நிகழ்ச்சிகளும் வரவேற்புகளும்

மாநாட்டு இரவுகளிலே கலை நிகழ்ச்சிகளும் வரவேற்புக்களும் நடைபெற்றன. பற்பல நிலையங்கள் வரவேற்பளித்தன. கீழை நாட்டுக் கல்விக்கழக வரவேற்பிலும், கிரெம்மிலினில்—நடைபெற்ற பொது வரவேற்பிலும் நான் கலந்து கொண்டேன். உருசியாவிலுள்ள இலங்கையின் தூதமைச்சர் கலாநிதி மலலசேகராவும் எங்களுக்கு ஒரு விருந்தளித்தார். உருசிய இலஙகை நட்புறவுச் சங்கத்தினர் கலாநிதி மென்டிசுக்கும் எனக்கும் தேநீர் விருந்தளித்தனர்.

மாநாட்டுக்குச் சென்ற பிரதிநிதிகளிற் பெரும்பாலானோ மொசுக்கோப் பல்கலைக் கழகத்திலும், உக்கிரேன் விடுதியகத்திலும் தங்கியிருந்தனர். விருந்தினராகச் சென்றோர் யாவரும் உக்கிரேன் விடுதியகத்திலே தங்கினர். இந்த விடுதியகம் 28 மாடிகளை உடையது. மொசுக்கோ நகரின் எண்டிசையிலும் இதனைப் போல எட்டுக் கட்டடங்கள் உள்ளன. இவை ஏனைய கட்டடங்களிலும் இதனைப் போல எட்டுக் கட்டடங்கள் உள்ளன. இவை ஏனைய கட்டடங்களிலும் பார்க்கத் தனித்துயர்ந்து கண்ணைக் கவரும் தோற்றத்துடன் காட்சியளிக்கின்றன.


உக்கிரேன் விடுதியக்கத்தில் பன்னூற்றுக் கணக்கான அறைகளுள. அறைகளின் இலக்கத்தின் முதல் எண்ணைக் கொண்டே அவை எந்த மாடியிலுள்ளன வெனக் கூறலாம். யான் தங்கியிருந்த அறையின் இலக்கம் 832 ஆகும். இதன் முதல் எண் எட்டாகையால் இது எட்டாம் மாடியிலுள்ளதென அறிந்து கொள்ளலாம்.

### காட்சிச் சாலை

மாநாடு நடைபெற்ற நாள்களிலும், அதற்கு முன்னரும்பின்னரும் மாநாட்டுப் பிரதிநிதிகள் மொசுக்கோ நகரிலுள்ள காட்சிக்குரிய பல இடங்களைப் பார்வையிடுதற்கு ஒழுங்கு செய்திருந்தனர். மொசுக்கோ நகரிலே பார்த்துப் பயனடைவதற்குப் பல இடங்களுள. இவற்றுளே பெரிதும் மக்களைக் கவர்ந்தது உருசியநாட்டின் வளர்ச்சியினையும் வளத்தினையும் புலப்படுத்தும் காட்சிச்சாலையாகும். சோவியத்து ஒன்றியதின் 15 இராச்சியங்களுக்கும் தனித்தனிக் காட்சி நிலையங்கள் இங்குள. இச்சாலையின் முகப்பில் உள்ள நட்பு நீரூற்றுக்கள் உள்ளத்தைத யீர்த்து உவகை நல்குகின்றன. 15 இராச்சியங்களுக்கும் 15 மனிதச் சிலைகளைச் செய்துவட்டமாகஅமைத்து அச்சிலைகளுக் கூடாக நீரூற்றுக்கள் பொங்கி எழும்பச் செய்துளர். இக்காட்சி 15 இராச்சியங்களின் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் பார்ப்பவர் உள்ளத்திலே பதிக்கிறது.

### இலெனின் கிறாட்

மொசுக்கோ நகரிலுள்ள கிறம்மிலினும், செஞ்சதுரமும், இலெனின் நூல் நிலையமும், புக்கின் கலைக்கூடமும், மத்திய சந்தையும் பிறவும் குறிப்பிடத்தக்கன



உக்கிரேன் விடுதியகம்

மாநாட்டிடையே இரு நாள் ஓய்வு கொடுக்கப்பட்டது. இவ்வோய்வின்போது விருந்துப் பிரதிநிதிகள் பலரையும் என்னையும் இலெனின் கிறாட்டுக்கு அழைத்துச் சென்றனர். கலாநிதி மென்டிசும் நானும் விமான மூலஞ் சென்றோம். ஏனையோர் புகைவண்டியிற் சென்றனர் இலெனின் கிறாட் உருசியாவின் இரண்டாவது பெரிய நகரமும் சிறந்த துறைமுகமுமாகும். தொழிலாளருடைய புரட்சி இலெனின் தலைமையில் இங்கேதான் தொடங்கிற்று. கிட்லருடைய படைகள் இந் நகரை 900 நாள் முற்றுகையிட்டும் வெல்ல முடியாமல் கடைசியில் தோற்கடிக்கப்பட்டன. இப்பெரும் சரித்திர நிகழ்ச்சிகளையெல்லாம் இலெனின் கிறாட்டு மக்கள் மிகுந்த உணர்ச்சியுடன் எடுததுரைப்பார்கள். பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில்

பண்டிதர்
கா. பொ. இரத்தினம்

சிறப்புற விருத்திசெய்யப்பட்ட இந்நகர் மிகுந்த அழகுடையதாகப் புதுப்பிக்கப்பட்டுளது.

### பல்கலைக்கழகத்தில் தமிழும் தமிழறிஞரும்

இந்நகரிலுள்ள கீழைநாட்டுக் கல்விக் கழகத்திலே பல பழைய ஏடுகளை அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்துளர். தமிழில் 17 ஏடுகள் இருக்கின்றன இவற்றுள் ஒன்று திருவாசக ஏடாகும். இக்கழகத்திற் பணியாற்றும் சொக்கிறுவு என்பவர் கீழைத்தேய மொழிகளின் வரலாறு பற்றி ஒரு நூல் எழுதியுளர். அதிலே தமிழைப் பற்றியும் எழுதியிருக்கிறார். தமிழ் வழங்கும் நாடுகளைக் குறிப்பிடும் படமும் இந்நூலிலுண்டு. இலெனின் கிறாட்டுப் பல்கலைக் கழகத்திலே தமிழும் கற்பிக்கிறார்கள்

இப்பல்கலைக் கழகத்திலே தமிழ் விரிவுரையாளராக இருப்பவர் [illegible] எனும் உருசிய அறிஞராவார். இவருக்கும் எனக்கும் சில ஆண்டுகளாகக் கடிதத் தொடர்புண்டு. எனவே உருசியாவிலே தமிழ்க் கல்வியில் ஈடுபட்டிருக்கும் ஏழு உருசியர்களுள்ளே இவர் என்னோடு முன்பழகியவர்போல நெருங்கிப் பழகினர்; உருசியாவிலே தமிழ் பயின்றுள்ள உருசியர்களிலே இவரே சிறந்த முறையிலே தமிழினைப் பேசுகிறார் என்பது என் கருத்து. இவருடைய பேச்சுச் செந்தமிழாகவே இருந்தது. தமிழைத் தமிழர் எவ்வாறு பேசுகிறார்கள் என்பதையறியவும் தம் தமிழ்ப்பேச்சை வளம்படுத்தவும இவர் காட்டிய ஆர்வம் பாராட்டுக்குரியது. மொசுக்கோவில் மட்டுமன்றி, இலெனின் கிறாட்டிலும் என்னுடன் சில மணி நேரத்தைத் தமிழிலே உரையாடுதலிற் கழித்தார். இந்தியப் பேச்சுத் தமிழுக்கும் இலங்கைப் பேச்சுத் தமிழுக்கும் உள்ள வேறுபாடுகளையும் அறிய முயன்ருர். இலங்கைத் தமிழ் உயர்ந்த நடையிலுள்ளதென அவர் கருதினுர். இவரோடு உரையாடும் பொழுது யானும் அவருக்கு ஈடாக ஓரளவுக்குச் செந்தமிழிலே உரையாட வேண்டியிருந்தது.

### தமிழ்ப் பெயர்கள்

தனித் தமிழின் சிறப்பியல்பினைத் தமிழர் இன்னும் நன்கு உணரவில்லை. ஆனல் உருசியத் தமிழறிஞர் பலர் அதனை நன்குணர்ந்துளர். தமிழ் மொழியின் பற்றினுலே அங்குள்ள சில தமிழறிஞர்கள் தம்பெயர்களுக்கு ஈடான தனித் தமிழ் பெயர்களை அமைத்து வழங்குகின்றனர். திரு உருடியன் அவர்கள் செம்பியன் எனும் பெயரைப் பூண்டுளர். இவரைப் போலவே பியாத்திகோசுக்கி என்பவர் ஐங்குன்றன் என்ற பெயரையும், யூரிகிளாசோவு என்பவர் 'கண்ணன்' எனும் பெயரையுங் கொண்டுளர். இத் தனித் தமிழ்ப் பெயர்கள் உருசிய மக்கள் கீழைத்தேய மக்களோடு ஒன்றி உணரத் தக்கவர்கள் என்பதை நன்கு புலப்படுத்துகின்றன.

### ஆராய்ச்சியும் நூலாக்கமும்

ஐங்குன்றன் சைவ இலக்கிய ஆராய்ச்சியிலீடுபட்டுளர். கண்ணன் சங்க இலக்கிய ஆராய்ச்சியிலும் திருக்குறள் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுளர். இவர்களைவிடத் திருவாளர்கள் ஆந்திரோநோவு, மாக்கரெங்கோ, கிருவற்கோவா என்பவர்களும் தமிழிலக்கணம், திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் முதலிய துறைகளில் ஈடுபட்டுளர். திரு. ஆந்திரோநோவு சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஓராண்டிருந்து தமிழ் கற்றவர். இவர் உருசிய மொழியில் ஒரு தமிழிலக்கணத்தை வெளியிட்டுளர். திருக்குறள் உருசிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள தென்பதைத் தமிழர்கள் யாவரும் அறிவர். உருசிய—தமிழ் அகராதி ஒன்றினைச் செம்பியன் உருவாக்கியுளர்.

### மறக்க முடியாதவர்

மாநாட்டிலே பங்குபற்றியவர்களிலே கிழக்குச் சேர்மனியிலிருந்து வந்த கலே

(15-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.

ப்ரம்மீகேச ரஞ்சன தைலம் (A)



கண்குடு, கண்எரிச்ச தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடிவிழுதல், நரையுண்டாகுதல், ஞாபகசக்தி குறைதல் முதலிய வியாதிகளை நீக்கி, தலைமயிரை அழகான கருநிறத்தில் இடை நெருங்க வளரச் செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரைமயிரை முன் போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத்தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100 வயதானுலும் "நரையும்" வழுக்கையும் உண்டாகாது. பெண்மணிகள் சேர்க்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படாது.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் 3-50.

(B) அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லா குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது. கூடுதலான நரை மயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச் செய்யும்படி சக்தி வாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகமாச் சேர்த்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

விலை: 6 அவுன்ஸ் 4-50.

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET,
COLOMBO—13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTHANTIRAN

1960 டிசம்பர் மாதம் 11-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.

# தமிழரசுக் கட்சியும் தலைமைப் பதவியும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த ஆண்டுத் தலைவராக பட்டிருப்புத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு எஸ். எம். இராசமாணிக்கம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். கடந்த வாரம் மட்டக்களப்பில் கூடிய தமிழரசுக் கட்சியின் செயற் குழுக் கூட்டம் இந்த நியமனத்தை ஏகமனதாகச் செய்திருக்கிறது.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களிடையே இன்றுள்ள நிலையில் ஒருவர் பெறக்கூடிய மிக உயர்வான, மிக உன்னதமான ஒரு தலைமைப் பதவி இதுவாகும். இப் பதவியைப் பெற்ற திரு இராசமாணிக்கத்தை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

அகில இலங்கையிலும் பதவி ஆசை சிறிதும் இல்லாதவர்களைத் தலைவர்களாகக்கொண்டு ஜனநாயக ரீதியாக இயங்கி வரும் ஒரு அரசியல் கட்சியுண்டென்றால் அது இலங்கைத் தமிழரசுக் கட்சியொன்றுதான் என்று ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் பெருமிதத்தோடு சொல்லக் கூடிய நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

தாமே முன் மாதிரி காட்டியதன்மூலம், தியாக உணர்ச்சியைத் தூண்டி, இப்படியான ஒரு புனித நிலையைத் தமிழரசுக் கட்சிக்குள்ளே புகுத்திவிட்ட பெருமை கட்சியின் ஸ்தாபகரான தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையே சார்ந்ததாகும். விரும்பியிருந்தால் தமது ஆயுள் பூராவுமே தமிழரசுக் கட்சியின் நிரந்தரத் தலைவராக அவர் விளங்கியிருக்கலாம். ஆனால் அவர் அப்படி விரும்பவில்லை.

நாட்டுக்காக—தனி மனிதர் ஒருவருக்காக—ஒருவரைச் சுற்றியே கட்சியைக் கட்டி எழுப்பியவரல்லர் திரு செல்வநாயகம். "தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொதுமக்களின் பொது ஸ்தாபனம். தமிழ் பேசும் இனத்தின் விடுதலை இயக்கம். எனவே அதன் தலைமைப் பதவி ஒருவருடைய ஏகபோக உரிமையல்ல, முதுசொம் அல்ல. உளம், வாக்கு, காயம் ஒத்து உண்மையாக உழைக்கும் ஒவ்வொரு கட்சித் தொண்டனும் தலைவர் என்ற உன்னத பதவிக்கு உயர உரிமை உடையவன். முன்னாள் தலைவர், பின்னாள் தொண்டனின் தலைமையின்கீழ் கட்டுப்பட்டிருந்து கடமையாற்றும் மனோபாவமும், பரிபக்குவமும் பெற வேண்டும்" என்ற தத்துவங்களை வெளியிட்டு, அதன்படி தாமே கட்டுப்பட்டிருந்து கடமையாற்றி முன்மாதிரி காட்டி வருகிறார் தமிழரசுத் தந்தை.

ஆதியில் திரு செல்வநாயகத்திடமிருந்த கட்சித் தலைமைப் பதவி கோப்பாய்க் கோமான் திரு கு. வன்னியசிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவரிடமிருந்து திருமலைப் பிரதிநிதி திரு என். ஆர். இராஜவரோதயத்திடம் கைமாறியது. இப்போது இளமையும் சேவைத் துடிப்பும் உடையவரான திரு எஸ். எம். இராசமாணிக்கத்தின் கைக்குப் போய்ச் சேருகிறது.

சுமுகமான முறையில், இத்தகைய ஒரு அதிகார மாற்றம் இலங்கையிலுள்ள வேறு எந்த ஒரு அரசியல் கட்சியிலாவது சர்வசாதாரணமாக நிகழுமா, நிகழ்ந்ததுண்டா என்பதைத் தமிழ் பேசும் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இது ஒன்றே போதுமே தமிழரசுக் கட்சியின் ஜனநாயகபூர்வமான கட்சி அமைப்புக்குச் சான்று பகர்வதற்கு. இது ஒன்றே போதுமே தமிழரசுக் கட்சியில் அதிகார ஆசையோ, பதவிப் பித்தோ இல்லை என்பதை நிரூபிப்பதற்கு.

யு. என். பியின் தலைமைப் பதவியை திரு டட்லி கைப்பற்றினால், "நான் அரசியலிலிருந்து துறவுபூணுகிறேன்" என்று சேர் ஜோன் கொத்தலாவலை வெளியேறுவதை நாம் கண்டிருக்கிறோம். இன்று ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்தவர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா. அவர் மரணமடையும்வரை ஆண்டாண்டு தோறும் அவரே தலைவராக இருந்து வந்தார். இறந்த பின் முறைப்படி தலைவராக வேண்டிய திரு ஸி. பி. டி. சில்வா நிரந்தர தலைவராக முடியவில்லை. திரு பண்டாரநாயகாவின் மனைவியாரே இன்று தலைவராகிக் கட்சிக் கட்டுக்கோப்பை காப்பாற்ற வேண்டியதாயிருக்கிறது.

வாயளவில் சமம் பேசும் சமசமாஜக் கட்சியை எடுத்துக்கொண்டால் அதன் தலைவரின் சமநிலைக்கு எந்தத் தோழரும் வர முடியவில்லை. கடந்த இருபத்தைந்து வருடங்களாக டாக்டர் என். எம் பெரேராதான் திரும்பத் திரும்பத் தலைவர்!

சமதர்மக் கொம்யூனிஸ்டு கட்சியிலும் எந்தக் 'கொம்ரேட்டு'க்கும் தலைமைப் பதவி கிடையாது. மீண்டும் மீண்டும் டாக்டர் எஸ் ஏ. விக்ரமசிங்காவும், பீட்டர் கெனமனும்தான்! அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தனிப் பெருந் தலைவர் என்றென்றும் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலந்தான்! இதில் மாற்றம் ஏற்படுவதானால் அவர் தற்கொலையே செய்துகொள்ளுவார். அகில இலங்கை சோனகர் சங்கத்தின் ஆயுட் தலைவர் சேர் ராஸிக் பரீத். இத்தியாதி, இத்தியாதி!

சமசமாஜக் கட்சியும், கொம்யூனிஸ்டு கட்சியும் தொழிலாளர் கட்சிகள் என்று சொல்லுகிறார்களே, ஒரு தொழிலாளர், கட்சித் தலைவர் ஆகட்டும் என்று டாக்டர் என். எம். பெரேராவும், பீட்டர் கெனமனும் என்றாவது ஒதுங்கி நின்றதுண்டா? இன பேதம், மொழி பேதம் எங்களுக்கு கிடையாது என்று இவர்கள் யாழ்ப்பாணத்து மேடைகளில் ஏறி நின்று பம்மாத்துக் காட்டுகிறார்களே, இதில் உண்மையுண்டா? அப்படியானால் எவ்வளவோ நீண்டகாலமாகக் கட்சிக்காக உயிரை விட்டு உழைத்திருக்கும் நண்பர் எஸ். நாகலிங்கத்தையோ தோழர் துரைராஜசிங்கத்தையோ சமசமாஜக் கட்சியின் தலைவராக்க டாக்டர் என். எம். பெரேரா இணங்குவாரா?

கொம்ரேட் கார்த்திகேசனையோ, தோழர் வ. பொன்னம்பலத்தையோ கொம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளராக பீட்டர் கெனமனோ, அன்றி சமதர்மம் போதிக்கும் அவர் சகாக்களோ விரும்புவார்களா? அப்படித்தான் நடக்குமா? நடக்குமென்று நினைக்கத்தான் முடியுமா? ஒரு போதும் நடக்காது. நடக்கவே நடக்காது! பின் ஏன் ஏமாந்த தமிழர் சிலர் யாழ்ப்பாணத்தில் இவர்களுக்கு வால்பிடிக்க வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

முடியிழந்து சரிந்து கிடக்கிறார் தனிப்பெருந் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம். இந்த நிலையிலாவது தலைவர் தம் மணிமுடியைத் தனயன் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு எம். சிவசிதம்பரத்துக்குச் சூட்டி வைக்க அவருக்கு மனம் வரவில்லையே! தமிழ் காங்கிரஸ் தோன்றிய காலம் முதல் ஒரே தலைவர்தான்! அந்தத் தலைவருக்காகவே தமிழ் காங்கிரஸ் உயிர் வாழ்கிறது.

இந்த இழிநிலை, சுயநலம், தலைமைப் பித்து, பதவி ஆசை தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை கிடையாது என்பது வருடா வருடம் நிதர்சனம் நிரூபிக்கப்பட்டு வருவதைத் தமிழ் பேசும் மக்கள் உணர்வார்களானால் தமி[illegible] கட்சிகளுக்குள்ள தாரதம்மியத்தை அவர்கள் உணர்ந்தவர்களாவார்கள்.

---

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்: 4

# ஆண்டுக்கு ஒரு தடவை கூடும் ஐ. நா. பேரவை

## அங்கத்துவ நாடுகளுக்கு சமத்துவம்- வாக்கும் ஒவ்வொன்றுதான்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஆறு உறுப்புகளில் ஒன்றாகிய பாதுகாப்புச் சபை பற்றிக் கடந்த வாரம் பார்த்தோம். ஐ. நா. பேரவை பற்றி இங்கு கவனிக்கலாம்.

பேரவை வருடத்தில் ஒரு முறை கூடுகிறது. தேவை ஏற்படுங் காலத்தில் விசேஷ கூட்டங்கள் கூட்டப்படலாம். பாதுகாப்புச் சபை கோரினால் அல்லது பேரவையின் பெரும் பகுதி அங்கத்தவர்கள் விரும்பினால் விசேஷ கூட்டங்கள் நிகழும். நிரந்தர நாடுகளின் தடுப்பதிகாரத்தினால் பாதுகாப்புச் சபை செயலாற்ற முடியாது போகுஞ் சந்தர்ப்பத்தில் ஐ. நா. பேரவை விசேஷமாகக் கூட்டப்படலாம். இத்தகைய விசேஷ கூட்டங்கள் இரண்டு தடவை 1947லும் 1949லும் பாலஸ்தீன் விஷயமாகக்கூட்டப்பட்டன. பேரவையில் எந்த நாட்டிற்கும் தடுப்பதிகாரம் கிடையாது. ருஷ்யா, அமெரிக்கா போன்ற பிரமாண்டமான குபேர நாடுகளானாலும் சரி, இஸ்ரேல், இலங்கை போன்ற சின்னஞ் சிறிய நாடுகளானாலும் சரி எல்லா அங்கத்தவ நாடுகளுக்கும் சம அந்தஸ்து உண்டு; ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு வாக்கே உண்டு.

### வாக்குறுதி

ஐ. நா. ஸ்தாபனத்தில் அங்கத்துவம் பெறும் பொழுது ஒவ்வொரு நாடும் ஒரு வாக்குறுதி அளிக்க வேண்டும். சர்வதேச விவகாரங்களில் தோன்றும் எந்தச் சச்சரவையும் சமாதான வழிகளிலே தீர்க்க முயல்வோம் என்று உறுதிகூற வேண்டும். ஐ. நா. வின் செலவினங்க[illegible]க்கு, சக்திக்கேற்றவாறு நிதி செலுத்த வேண்டும். ஒவ்வொரு அங்கத்துவ நாடும் பேரவை கூட்டங்களுக்கு ஐந்து பிரதிநிதிகளையும் ஐந்து மாற்றுப் பிரதிநிதிகளையும் அனுப்பலாம்.

### சக்தி மிக்க ஆயுதம்

பேரவையின் தீர்மானங்கள் சட்டப்படி எந்த அங்கத்துவ நாட்டையும் கட்டுப்படுத்துவன அல்ல. ஆனால் உலக அரங்கின் தீர்மானம் ஒன்றை மீறி நடக்க அசாத்திய துணிவல்லவா வேண்டும்! இனஒதுக்கல் தென்னாபிரிக்காவில் உள்நாட்டு விஷயம் என்று அந்த நாட்டு அரசாங்கம் கூறினாலும் உலக நாடுகள் தன்னைத் தனிக்கப் பிடித்திருக்கின்றன. என்பதில் தென்னாபிரிக்கா கவலையற்றிருக்கவில்லை. 'உலக அபிப்பிராயம்' என்பதே ஐ. நா. வின் பலமிக்க ஆயுதம்.

### பேரவையின் பணி

உலக விவகாரங்களில் அநேகமாக எந்த ஒன்றைப் பற்றியும் ஐ. நா. பேரவை விவாதிக்க முடியும். குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு ஏற்ற பரிகாரம் என்ன என்றும் சிபார்சு செய்ய முடியும்.

ஐ. நா. வில் ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிக்கும்படி அங்கத்துவ நாடுதான் கோர வேண்டுமென்றில்லை. கொங்கோ கடந்த வாரம் தான் அங்கத்துவ நாடா

"சூரியன்"

யிற்று இருந்தும் அங்குள்ள பிரச்சினையை கொங்கோ ஐ. நா. வில் சமர்ப்பித்த[illegible]. இன்று கொங்கோவில் ஐ. நா. இராணுவம் பணிபுரிகிறது.

உலக பொருளாதார அபிவிருத்தி, சமுதாய முன்னேற்றம், பரஸ்பர ஒத்துழைப்பு, ஆகிய துறைகளில் பணியாற்றும் ஐ. நா. உறுப்பு, இப் பேரவையேயாகும். பின் தங்கிய நாடுகட்குத் தொழில் நுட்ப உதவி, மனித உரிமைகள் பற்றிய சர்வ தேசப் பிரகடனம் ஆகியவை யனைத்தும் பேரவை ஆற்றிய பணிகளேயாகும்.

கல்வி கலாச்சார விஞ்ஞான ஸ்தாபனம், சர்வதேச தொழில் ஸ்தாபனம், உலக உணவு-விவசாய ஸ்தாபனம் ஆகியவை ஐ. நா. ஸ்தாபனம் நிறுவிய விசேஷ ஏஜன்ஸிகள். இந்த ஏஜென்ஸிகளுடன் ஐ. நா. ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்களெல்லாம் பேரவையாலேயே அங்கீகரிக்கப்பட வேண்டும். ஐ. நா. ஸ்தாபன வரவு-செலவுத் திட்டம் பேரவையால் தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு அங்கத்துவ நாடும் இன்ன தொகை செலுத்த வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறது பேரவை. பாதுகாப்புச் சபையால் சிபார்சு செய்யப்பட்ட மகா-காரியதரிசி பேரவை அங்கீகாரம் பெற்றே பதவியேற்கிறார். மகா-காரியதரிசி வருடா வருடம் ஐ. நா. ஸ்தாபனம் பற்றிப் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

### ஐ. நா. கமிட்டிகள்

பேரவையின் விவாதங்களில் பெரும் பகுதி கமிட்டிகளிலேயே நடைபெறுகின்றன. கமிட்டிகளில் நாலு வகையுண்டு. அவையாவன: பிரதம கமிட்டி, நடைமுறைக் கட்டி, நிரந்தர கமிட்டி, விசேஷ கமிட்டி. ஆகும் தேவை ஏற்படும் சமயங்களில் விசேஷ கமிட்டிகள் நிறுவப்படுகின்றன. உதாரணமாக எதிர்பாராத வகையில் ஒரு அரசியற் பிரச்சினை தோன்றினால் உடனே பேரவை ஒரு அரசியற் கமிட்டியை நிறுவிக் கொள்ளும். இது போன்று பொருளாதார, சமுதாயப் பிரச்சினைகளைப் பரிசீலிக்க கமிட்டிகள் நிறுவப்படலாம். கமிட்டிகளின் விவாத முடிவுகள் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படும். இதன் பின்னர் அத் தீர்மானம் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேச சட்டக் கமிஷன் ஒன்றையும் ஐ. நா. நிறுவியுள்ளது. சர்வதேச சட்டத்தைக் கிரமப் படுத்திப் பிரசுரிப்பதே இதன் நோக்கம். இலங்கையும் வேறு 12 நாடுகளும் அங்கத்துவம் கோரிய பொழுது ருஷ்ய-அமெரிக்க போட்டியின் விளைவாக அங்கத்துவப் பிரச்சினை நீண்ட காலம் இழுபடலாயிற்று. அச் சமயம் ஒரு விசேஷ கமிட்டி நிறுவப் பட்டு சமரஸமான முடிவு ஏற்பட்டது. பாலஸ்தீனம், பால்க்கன்ஸ், கொரியா ஆகிய இடங்களுக்கு நேரடியாகப் போய ஸ்தலத்திலேயே பிரச்சினைகளைக் கவனிப்பதற்கும் ஐ. நா. கமிஷனகளை நியமித்து ஆக்கபூர்வமான பணி புரிந்திருக்கிறது.

### கலனிகளுக்குச் சுதந்திரம்

2-வது யுத்தத்தில் இத்தாலி தோற்கடிக்கப்படு முன ஆபிரிக்காவில் வைத்திருந்த கலனிகளின் எதிர்காலம் ஒரு தலைபிடியாயிருந்தது. வல்லரசுகள் ஐந்தும் ஒரு முடிவிற்கு வர முடியவில்லை. அப்பொழுது ஐ. நா. பேரவை தலையிட்டு பிரச்சினைக்குப் பரிகாரம் காட்டிற்று. லிபியாவுக்கும் எரித்திரியாவுக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும் என்பது பேரவையின் தீர்மானம்.

வல்லரசுகளிடையே போட்டி இன்று மிகுந்து விட்டது. நேர்முக ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம், சமுதாய தத்துவத் துறையில் ஆதிக்கம் என்றிவ்வாறு பல துறைகளில் போட்டி மலிந்து விட்ட இச் சகாப்தத்தில் இரு வல்லரசுக் கோஷ்டிகளுக்குமிடையே 'வைக்கோல் மிக நன்றாகக் காய்ந்திருக்கிறது.' எந்த ஒரு முடுக்கிலும் ஒரு சிறு பொறி பறந்தால் போதும். உலக பிரளயம் தான்! இந்தச் சூழ்நிலையில் உலக மக்களின் தலைவிதியை சிதறவிடாமல் ஓரளவாவது ஸ்திரப்படுத்திக் காத்து வருகிறது ஐ. நா. பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிலும் கிழக்கிலும்

# நீதி மன்றத்தில் தமிழுக்கு இடமில்லையானால்

## சமரசப் பேச்சில் சாரமில்லை

### மட்டக்களப்பு செயற்குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி நிறைவேற்றிய தீர்மானம்

## புது வருடத் தலைவர் இராசமாணிக்கம்

**"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் தமிழ் வழங்க வழியில்லையானால் அரசாங்கத்தோடு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் சாரமில்லை" என்றவாறு தமிழரசுக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.**

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கடந்த வார இறுதியில் மட்டக்களப்பில் திரு வி. எஸ். பூபாலரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டு இருக்கிறது:—



திரு எஸ். எம். இராசமாணிக்கம்

**தீர்மானம்**

"நீதிமன்ற மொழி மசோதாவில் ஆங்கிலத்தின் இடத்தில் தமிழ் வழங்க வழி செய்யப்படவில்லை. ஆகையால் இது தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமையை மறுப்பதாகும். சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும் இது முரணானதாகும். ஆகவே நீதிமன்ற மொழி மசோதாவைத் திருத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களிலே நீதிமன்றங்களில் வழக்குகளைத் தமிழில் நடத்தவும் குறிப்புகளைத் தமிழில் எழுதி வைக்கவும், தீர்ப்பு பதிவு தமிழில் நடக்கவும் ஏற்பாடு செய்தாலன்றி, இனி அரசாங்கத்தோடு மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் பயனில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு தீர்மானிக்கிறது."

**தலைவர்**

இந்தக் கூட்டத்தில் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தை கட்சியின் புதுவருடத் தலைவராக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இவருடைய பெயர் கட்சியின் மாநாட்டில் பிரேரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு, தெரிவு அங்கீகரிக்கப்படும்.

**மாநாட்டுத் தேதி**

கட்சியின் மாநாட்டை இம்மாதம் 23-ம் 24-ந் தேதிகளில் நடத்துவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**தமிழரசுத் தந்தை**

"எமது பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் சுமுகமாகத் தீர்க்க முடியாத சூழ்நிலையில், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு எந்த விதமான கஷ்டமான வழியிலும் நாம் செல்லத் தயாராக இருக்கிறோம்" என்று தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அறிவித்தார். செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் மட்டக்களப்பில் திரு பூபாலரத்தினம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே தமிழரசுத் தந்தை மேற்கண்டவாறு கூறினார்.

**டாக்டர் நாகநாதன்**

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் தமிழ் பேசும் மக்கள் தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைத்துக் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும் அப்போதுதான் உரிமைகளைப் பெற முடியும் என்றும் சொன்னார்.

## சித்திர ஆசிரியர்கள் கல்வி மந்திரியை பேட்டி காண்பர்

"இலங்கையில் இன்று ஏற்பட்டு இருக்கும் இழிநிலை வேறு எந்த நாட்டிலும் ஏற்படவில்லை. எவ்வளவோ சித்திர ஆசிரியர்கள் சித்திரம் கற்று வேலையற்று இருக்கிறார்கள். இவர்களுக்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்." இவ்வாறு கண்டி தர்மராஜா கல்லூரியில் டிசம்பர் 4-ந் தேதி நடந்த சித்திர ஆசிரியர்கள்—கலைஞர்கள் மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது சம்பந்தமாக கல்வி மந்திரியை பேட்டி காண்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சித்திர ஆசிரியர்கள் கோஷ்டியொன்று தற்சமயம் கொழும்பில் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றது. செங்கடகல எம். பி. திரு செல்டன் ரணராஜா தலைமையில் செல்லும் தூது கோஷ்டியில் பிரபல சித்திர ஆசிரியர்களான எஸ். ஏக்கிரமசிங்ஹா, எப். எஸ். பொன்னப்பெருமா, எஸ். என். இராசா, ஜனாப் மதார் சாகிப, சேனரத்ன, எஸ். ஆர். கனகசபை ஆகியோர் செல்வார்கள் எனத் தெரிகிறது.

## கந்தமுருகேசனார் விழா மலர்

தென்புலோலியூர் கந்தமுருகேசனாருக்கு விழாவெடுக்க அவருடைய மாணவர்களும் அனுதாபிகளும் முயற்சிகள் செய்து வருவது தெரிந்ததே.

விழாவின்போது கந்தமுருகேசனார் பாராட்டு மலர் ஒன்றையும் வெளியிடவிருக்கிறார்கள். மலருக்கு கட்டுரைகள், கவிதைகள் முதலானவற்றை அன்பர்களிடமிருந்து வரவேற்கிறார்கள்.

விஷயதானத்தை திரு மு. கணபதிப்பிள்ளை, 47, பசிள்ஸ் ஒழுங்கை, கொழும்பு-6 என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டிருக்கிறார்கள்.

## தமிழரசுக் கட்சியும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இறங்கட்டும். இனியும் தாமதிக்க நேரமில்லை.

செய் அல்லது செத்து மடி.

இங்ஙனம்
தமிழ் முதல்வன்

5-12-1960

**அச்சு இயந்திரங்கள்**

இரண்டு கிரவுன் சைஸ் ஹரில்ட் பிளேட்டன்— ஒன்றின் விலை ரூ. 3500/-, ஒரு கிரவுன் சைஸ் குரப்பர் சார்ல்ரன் பிளேட்டன் ரூ 3250/-, ஒரு இங்கிலிஸ் மேக் சிங்கிள்டிமை சிலிண்டர் ரூ. 4750/-, ஒரு அல்பியன் புரூப் பிரஸ் சிங்கிள் டிமை ரூ. 1500/- எல்லாம் நல்ல நிலைமையில் உள்ளவை. பார்வையிடலாம்.

161, செட்டியார் தெரு. கொழும்பு. போன் 79141.

## பள்ளிவாசலுக்கு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. எங்கு போய் முடியுமோ யார் கண்டார்கள்!"—இவ்வாறு அபிப்பிராயம் தெரிவித்தார் ஒரு முஸ்லிம் பெரியார். கூறகந்தப் பள்ளிவாசல் சம்பந்தமாக என்ன செய்ய உத்தேசம் என்று கேட்டதற்கு அவர் நேரடியான பதில் எதுவும் அளிக்கவில்லை. மேற்கண்ட குறிப்பை மட்டும் சொன்னார்.

## கலைஞர்கள், எழுத்தாளர்கள்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ராசனின் முகம் குப் என்று சிவந்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுத்தாளர் அறிமுகப்படலத்தை முடித்தார்.

**அவரும் இவரும்**

பின்னர் ஒருதடவை திரு செல்வராசன் பேச முன்வந்தார். அப்போது அவர், "நான் 'வீரகேசரி'யில் வேலை செய்தபொழுது திரு பார்த்தசாரதி அந்தப் பத்திரிகைக்குச் சில விஷயங்கள் எழுதி அனுப்பினார். அவற்றைப் பார்த்தபோதே நான் தெரிந்துகொண்டேன், அதாவது திரு பார்த்தசாரதி முன்னுக்கு வரக்கூடியவர் என்பதற்கான அடையாளங்களை அவருடைய அப்போதைய அந்த ஆரம்பப் படைப்புகளில் நான் கண்டேன்" என்றார். கூட்டத்தில் குபீர் சிரிப்பு எழுந்தது. 'அது சரி. நீங்கள் நிச்சயம் கண்டிருப்பீர்கள்...... கண்டிருப்பீர்கள்" என்ற குரல் எங்கோ ஒரு மூலையில் ஒலித்தது. பலருடைய கண்களும் கதிரையில் அமர்ந்திருந்த பார்த்தசாரதியின் வாட்டசாட்டமான உருவத்தையும், பேசிக்கொண்டு நின்ற செல்வராசனின் குள்ளத் தோற்றத்தையும் ஏளனத்தோடு உற்று நோக்கின.

திரு பார்த்தசாரதி கடைசியில் தாம் பேசுகையில் கூட்டத்தில் எழுப்பப்பட்ட பல பிரச்சினைகளுக்குப் பதிலளித்தார். அவர் கூறியதாவது:—

"பழமை — புதுமை மோதல் கூடாது. இரண்டில் ஒன்றையுமே ஒதுக்கித்தள்ள முடியாது. பழைய இலக்கியங்களை எல்லோரும் படிக்க வேண்டும். அதன் பின்னர் பழமையின் துணைகொண்டு புதுமை இலக்கியம் படைக்க வேண்டும். அதுதான் நின்று பிடிக்கும்.

**வியாபார நோக்கும் இலக்கிய நோக்கும்**

"பத்திரிகைகள் தனியாக வியாபார நோக்கோடு நடத்தப்படுவதுமில்லை; தனியாக இலக்கிய நோக்கோடு நடத்தப்படுவதும் இல்லை. வியாபாரம் இலக்கியம் முதலானவை பொதுப்படையாக எல்லாப் பத்திரிகைகளுக்கும் நோக்கமாயிருக்கும். இதைக் குறை கூற முடியாது. ஏன் இலங்கையில் 'தமிழ் இலக்கியக் கூப்பாடு' போடும் ஒரு பத்திரிகை, 'இலங்கையில் இன்று கூடுதலாக விற்பனையாகும் தமிழ்த் தினசரி...' என்று முன் பக்கத்தில் பட்டி போட்டு வரவில்லையா? இது வியாபார நோக்கமில்லாமல் வேறென்ன? உண்மையில் இலக்கிய நோக்கோடு அந்தப் பத்திரிகை வெளியிடப்படுகிறது என்றால் 'கூடுதலாக இலக்கிய விருந்தளிக்கும் பத்திரிகை......' என்றல்லவோ பட்டி போட வேண்டும்.

**அவமானம்**

"இலங்கை எழுத்தாளர்கள் விற்பனை, கொள் முதல் ரீதியில் தமது படைப்புகளுக்கு தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இடம் கேட்பது தவறு. அது ... கூட... 'உங்கள் பத்திரிகையில் இத்தனை ஆயிரம் பிரதிகள் இலங்கையில் விற்பனையாகின்றனவே, அதனால் எங்கள் படைப்புகளை நீங்கள் கட்டாயம் ஏற்றுப் பிரசுரித்துத்தான் ஆக வேண்டும்' என்று கேட்பதை விட 'தாங்கள் நன்றாகத்தானே எழுதுகிறோம், இதோ இலற்றைப் பிரசுரியுங்கள்' என்று தலைநிமிர்ந்து தன்மானத்தோடு கேட்கலாம். அதை விட்டுக் கெஞ்சுவது கேவலம். நல்ல சரக்கை தமிழகத்துப் பத்திரிகைக்காரர் கையில் வைத்து, 'இதைப் பிரசுரிக்கிறீர்களா, இல்லையா?' என்று அடித்துக் கேட்க வேண்டும்.

"ஈழத்துப் பத்திரிகைகளுக்குஈழத்தவர்களிடம் ஆதரவுதேடுவதற்காக தமிழகத்திலிருந்து வரும் பத்திரிகைகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று சொல்வது கோழைத்தனம். தமிழகத்துப் பத்திரிகைகளை விடச் சிறப்பானவையாக இங்குள்ள பத்திரிகைகளை நாம் ஆக்கவேண்டும்; புதியனவற்றைத் தோற்றுவிக்க வேண்டும். அப்போது இவற்றிற்குத் தாமாகவே ஆதரவு ... இவ்வாறு திரு பார்த்தசாரதி கூறினார்.

(13-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துத் தேர்ச்சி பெறட்டுமே என்றும் கூறுகிறார்கள்.

சிங்கள பயிற்சிக் கல்லூரிகள் சிங்களவர்களுக்கு மட்டுமே என்று விடாப்பிடியாக நிற்கும் சிங்கள வாலிபர்கள் முஸ்லிம்களை அவைகளில் அனுமதிப்பது கூடாது என்று அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள்.

அறிவிற்கு விருந்து, பொழுதுபோக்கு, முன்னேற்றத்திற்கு வழி இவைகளைத் தரும் தமிழ் புத்தகங்கள் வேண்டுமானால்:

**வெஸ்டன் ஏஜன்சீஸ்,**

63, பேங்ஷால் வீதி,
கொழும்பு—1.
போன்: 2885.

சி. சீ. சீ.

**தெங்குப் பசளைக் கலவைகள்**



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:—

கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி, லிமிட்டெட்.

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது].

தபாற் பெட்டி இல. 33, கொழும்பு. ccc625

# அவனுக்கு புதியவள்!

சிறுகதை — எழுதியவர்: "தி வா ன்"

அருணு காத்திருந்தாள்.

மாலை மறைந்துகொண்டிருந்தது. எதிரேயிருந்த நீலக் கடலின் வெள்ளை நுரைகள் ஒளி குன்றிக்கொண்டிருந்தன. இருள் தன் கரும் போர்வையைத் தட்டித் தயார்படுத்திக்கொண்டிருந்தது. கடற்கரை விளக்குகள் கண்சிமிட்ட வேண்டியது தான் பாக்கி.

ஆனால் இன்னும் அவன் வரவில்லை.

அருணு எப்படிப் பொறுப்பாள்? மாலை ஐந்து மணிக்கு என்னை அங்கே காணலாம்' என்று கூறியவன் இன்னும் வரவில்லையே! என்ன இடர் எதிர்ப்பட்டதோ! இல்லை, இல்லை. அதோ அவன் வருகிறான் நூர்ந்துபோக இருந்த விளக்கை திடீரென எண்ணெய் ஊற்றிப் பற்ற வைத்ததுபோல் அவள் உள்ளம் சுடர்விட்டது ஆமாம் திருச்செல்வம் வந்துகொண்டிருந்தான்!

அப்பாடா! இப்போதான் அவள் உயிருக்கே 'உயிர்' வந்தது. காதலில் பிணைந்து, அது இன்றேல் சாதல் என்ற நிலைக்கு வந்த பிறகு அவளுக்கு அவன் உயிரில்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?

இருந்தாலும் அவள் உள்ளத்தே ஒரு குறையின் குடைச்சல்: திருச்செல்வம் எத்தனை நல்லவர்! அவர் காட்டும் அன்புக்கு நான் தகுதியுள்ளவளா? நான் உண்மையில் உள்ளத்தால் தூய்மையானவளா?—திருச்செல்வத்தைக் காணும் ஒவ்வொரு சமயமும் திடீரென்று அவள் இதயத்தில் மொய்க்கும் இந்த எண்ணங்களை அவளால் இலகுவில் துரத்திவிட முடிவதில்லை. ஏதோ ஒன்றைத்தாம் மறைப்பதுபோலவும் அதை எப்படியாவது திருச்செல்வத்துக்குச் சொல்லிவிட வேண்டும்போலவும் அவள் உள்ளம் துடிக்கும் ஆனால் அதைச் சொல்லத்தான் அவளால் இன்னும் முடியவில்லை.

"மன்னிக்க வேண்டும் அருணு; சொன்ன நேரத்துக்கு என்னால் வர முடியவில்லை" அவளை அணுகிய திருச்செல்வத்தின் சமாதானம்.

"போங்கள் எப்போதான் நீங்கள் சொன்ன நேரத்துக்கு வந்திருக்கிறீர்களாம்?" உதட்டில் மட்டுமே முளைத்த பொய்ச் சினத்தின் எதிரொலிப்பு.

"அட, கோபங்கூட உனக்கு வருகுதே, பலே!"

"கோபம் வராமல் என்ன செய்யும்? நான் என்னென்னவெல்லாம் நினைத்துப் பயந்து போனேன்"

"அப்படியெல்லாம் பயப்பட நேர்ந்திருக்காது அந்த பாழாய்ப்போன நண்பன் என்னும் மாயப் பிசாசு வந்திருக்காவிட்டால். ஏதோ 'மட்னி ஷோ' வென்று என்னை இழுத்துக்கொண்டு போய்விட்டான். மறுக்க முடியவில்லை"

பேசிக்கொண்டே இருவரும் தனிமையை நோக்கி நடந்தனர். கவிழ்க்கப்பட்டிருந்த படகொன்று குறுக்கிட்டது. அதுவே ஓர் ஒதுக்கிடமாகக் காணப்படவே இருவரும் அதன் மறைவில் அமர்ந்துகொண்டனர்.

"எப்படி படம் நன்றாயிருந்ததா?" என்று அருணு படத்தைப்பற்றித் தொடுத்த கேள்வியே அவள் வாழ்வில் சோகப் படமொன்றை ஆட விடப்போகுதென்பதை அவள் கண்டாளா?

"படம் நன்றாயிருந்தது. ஆனால் அதை ஏன் பார்த்தோம் என்றுதான் கவலைப் படுகிறேன்"

"ஏனோ?"

"படம் என் வாழ்க்கையையே படம்பிடித்தது போலிருந்தது. அருணு உனக்கு இத்தனை நாளும் சொல்லாமல் இருந்த வொன்றை இப்போதே சொல்லிவிடுகிறேன். அந்தப் படத்தில் வந்த கதாநாயகி மல்லிகாவைப்போல் எனக்கும் முன்பொரு மல்லிகா இருந்தாள். அந்தப் படத்திலே வந்த மல்லிகா இடையில் இறந்துவிடுவதைப் போல் என் மல்லிகாவும் இறந்துவிட்டாள். அதற்கப்புறந்தான் உன்னைக் கண்டேன். காதலித்தேன்" என்ற அவன் பேச்சில் நெகிழ்வுக்குப் பதில் பெருமிதமும் காதல் தனக்கு அப்படி ஒன்றும் புதிதானதல்ல என்ற மனப்பான்மையும் பளிச்சிட்டன.

அருணுவை வியப்பு வளைத்துக்கொண்டது. "என்ன நீங்கள் முன்பே ஒருத்தியைக் காதலித்தீர்களா?" என்று அவள் கேட்டபோது ஒரு துளி கவலை? ஏமாற்றம்? இல்லை, ஆச்சரியந்தான் அரவணைத்துக் கிடந்தது. காரணம் அப்படி ஒரு மோதல் அவனுக்கும் முன்பு ஏற்பட்டிருக்கிறதே!

●

அப்போது அருணு கல்லூரி மாணவி. அவளது கல்லூரித் தோழியாகக் கமலி வந்து வாய்த்தாள். அவள் அடிக்கடி அருணுவின் வீட்டுக்கு வருவாள். அதன் காரணம் அருணுமேல் அவள் கொண்டிருந்த அன்பு மட்டுமல்ல. அவள் அண்ணு வடிவேலுடன் கொண்டிருந்த மாருத காதலுந்தான். கமலியும் வடிவேலுவும் காதல் பைத்தியங்கள். பைத்தியங்களின் கூத்துகளைப் பார்ப்பதில் பிறருக்கு வேடிக்கை. அதே நிலைதான் அருணுவுக்கும். ஆனால் அந்தக் காதல் பைத்தியம் தன்னையும் பிடித்து அதைப் பார்த்து மற்றவர்கள் கேலி செய்யப் போகிருர்களே என்ற எண்ணம் இளமுருகுவைக் காணும்வரைக்கும் அருணுவுக்கு ஏற்படவில்லை. இளமுருகு கமலியின் அண்ணு, ஒருநாள் இளமுருகுவை கமலி தன்னோடு அழைத்து வந்தாள் அவனை அருணு கண்டாள், அவன் இதயத்தைப் பார்வையால் துளைவை செய்தாள். அந்தத் துளையில் அவள் நினைவுப் பறவை போய் கூடு கட்டிக்கொண்டது. அப்படியானல் இளமுருகு? கரும்பு தின்னக் கூலியோ?

இப்போது அருணுவையும் இளமுருகுவையும் பார்த்துக் கேலி செய்வதே கமலிக்கும் வடிவேலுவுக்கும் வேலையாகிவிட்டது.

ஆனால் அந்தக் காதல் கனவுகள் நடைபயின்ற அந்த இன்பப் பாதை நீண்டு கிடக்கவில்லை. குறுக்கே மரமொன்று சரிந்து வீழ்ந்தாற்போல் திடீரென்று ஒருநாள் இளமுருகு—அருணுவின் காதலன்-கமலியின் அண்ணு இறந்துவிட்டான்!

ஓடு பிரித்த ஆமையின் நிலை எப்படி இருக்கும்? அதே நிலை அருணுவுக்கு.

அதன் பிறகு என்ன காரணத்தாலேயோ வடிவேலு-கமலியின் காதலிலும் பிளவேற்பட்டுவிட்டது. அவர்கள் எவ்வளவு வேகத்தில் மூச்சைப் பிடித்துக்கொண்டு தம் காதலில் முன்னேறினர்களோ அதே வேகத்தில் அதற்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டே மூச்சுவிட்டனர்.

ஆனல் ஐந்தாண்டுகள் கழித்து அருணுவின் வாழ்வில் மீண்டும் காதல் குறுக்கிட்டது. ஆமாம் திருச்செல்வம் எதிர்ப்பட்டான். தொடக்கத்தில் அருணு அதை விரும்பவில்லை. ஆனல் திருச்செல்வத்தின் இடைவிடாத் தூண்டுதல் மீண்டும் அவளை காதல் உலகில் உருட்டிவிட்டது. செத்த இன்பம் திரும்பவும் சிரித்தது.

இருந்தாலும் அருணுவின் உள்ளத்தில் ஒரு குறை. தன் மேல் அன்பைச் சொரியும் திருச்செல்வத்திடம் தான் ஏற்கனவே ஒருத்தனல் காதலிக்கப்பட்டவள் என்ற உண்மையை ஒளித்து வைத்திருப்பது ஒரு பெருங் குறையாகவே பட்டது. ஏன், துரோகமாகவும் கூடத் தோன்றியது. உள்ளதைச் சொல்லி உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ள விரும்பினுள். அதற்கான சந்தர்ப்பந்தான் கிடைக்கவில்லை. ஆனல் இன்று இந்தக் கடற்கரையில் அந்தச் சந்தர்ப்பம் தானகக் காலடியில் வந்து தஞ்சம் புகுந்தது.

●

தன் இதயத்தில் ஏற்கனவே ஒரு காதல் சுரம் பாய்ந்துள்ளது என்று உண்மையைக் கூறிய திருச்செல்வம், "அருணு, உனக்கு அப்படி ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா?" என்றுன் மங்கிய நிலவில் எழுந்தெழுந்து மாளும் அலைத்தலைகளை பார்த்துக்கொண்டே.

அவன் கேள்வியில் பரந்த மனப்பான்மை பளிச்சிட்டாலும் "எனக்கு அப்படி ஒன்றும் இதற்கு முன் ஏற்படவில்லை, காதல் செய்வது இதுவே முதல் தடவை' என்றுதான் அருணுவிடமிருந்து பதில் வரவேண்டும் என்று அவன் மனம் வேண்டிக்கொண்டது.

பாவம், திருச்செல்வத்தின் உள்ளத்தை அவள் அறியாள்!

சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்த அருணு, "எனக்கும் அப்படி நடந்தது அத்தான். இதைச் சொல்லி என் மனக்குறையைப் போக்கி, உள்ளத்தைத் தூய்மைப் படுத்த வெகுநாளாகக் காத்திருந்தேன்" என்று முன்னுரை போட்டுவிட்டு ஒருபிடி மனலை அள்ளிக் கடலுக்குள் வீசினுள். அப்போது அவள் அணிந்திருந்த கண்ணுடி வளையல்கள் குலுங்கின. கூடவே கடலுக்குள்ளும் 'கிளுக்' என்ற வோர் கலக்கம்.

திருச்செல்வத்தின் உள்ளத்திலும் அதே கலக்கம். "என்ன, உனக்கும் அப்படி நடந்ததா?" என்ற அவன் கேள்வியில் ஒருவித அவமானமும் ஆத்திரமும் அமிழ்ந்தமிழ்ந்து வெளி வந்தன.

"ஆமாம் உங்களுக்கு முன்பு என்னை ஒருத்தர் காதலித்தார். நானும் அவரைக் காதலித்தேன். திடீரென்று ஒருநாள் அவர் மாரடைப்பால் இறந்து போனர். அதன்பிறகு வாழ்வே கசந்து கிடந்த எனக்கு உங்கள் வருகைதான்புனர்ஜென்மம் அளித்தது" இதைக் கூறிய போது நன்றியொன்றிய காதல் உணர்ச்சியால் அருணுவுக்குக் கண்ணீரே வந்துவிட்டது.

ஆனல் திருச்செல்வத்துக்கு?

எதிரேயிருந்த கடல் கசந்தது, காதல் கசந்தது. அந்தக் காதலைத் தந்த அருணுவின் முகம் கசந்தது. கசந்தது...அதன் பிறகு அவன் அங்கு தாமதிக்கவில்லை. "சரி! போவோம் நேரமாயிற்று" என்றவனுய் எழுந்து நடந்தான். அவன் முன்னே இரு உருவங்கள் எழுந்து நடந்தன—.

ஒன்று, அருணுவின் பழைய காதலன், மற்றது அருணுவின்

(13-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை பித்த வாய்வு. புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல் நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

## பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

## பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

## ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


# நட்ட ஈட்டுக் குற்றங்களில்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

குதிரையையும் அதற்கொரு சவாரிக் காரனையும் கூலி கொடுத்து வண்டியை யோட்டுவித்தார். சவாரிக் காரனின் அசட்டையின் காரணமாக குதிரை குழப்படி பண்ணி இன்னெருவருக்குக் காயம் விளைத்தது இச்சந்தர்ப்பத்தில் சவாரிக்காரன் வண்டிக்காரரின் வேலையாளல்லவெனவும் அக்குற்றத்திற்கு அவர் பாதகிரவாளியல்லரெனவும் கூறப்பட்டது. கிட்டத்தட்ட இதைப் போன்ற ஒரு வழக்கில் வித்தியாசமான தீர்ப்பு அளிக்கப்பட்டது.

### கண்டியில் நடந்தது

கண்டி நகரசபை மலசுத்திக்காக வண்டிகள் வைத்திருந்தது. ஆனல் அதற்குக் கடருவதற்கு மாடுகளும் வண்டி செலுத்து வோனும் ஓர் ஒப்பந்தக்காரர் (Contractor) கூலியாகக் கொடுததார். மாடுகள் நகரசபை மடுவத்துக்குக் கொண்டு வரப்பட்டு நகரசபை மேற்பார்வை உத்தியோகஸ்தரின் கண்காணிப்பில் வண்டியில் கட்டப்பட்டு அவர்களின் மேற்பார்வையில் நகர சுத்தி வேலைக்கு அமர்த்தப்பட்டன. இச்சூழ்நிலையில் ஒருவரின் மோட்டார் வாகனத்தில் இவ் வண்டி மோதி சவாரிக்காரனின் அசட்டையால் நட்டம் விளைந்தது இங்கு சவாரிக்காரன் நகர சபையின் வேலையாளெனத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. உயர் நீதிமன்ற நீதியரசர் சம்பாயோ (Sampayo) அவர்கள் இதைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"இங்கு நகரசபை நேரே வண்டிக்காரனின் சம்பளத்தைக் கொடுக்கவில்லை. எனினும் நகரசுத்தித் தொழில் ஒப்பந்தக்காரரால் செய்யப்படுவதல்ல. அது நகரசபையாலே செய்யப்படுவது. வண்டி இத்தொழிலில் ஈடுபடும்பொழுது வண்டி ஓட்டுபவனும் நகரசபையின் வேலையாளாகிருன். இதைவிட இவ்வேலை நகரசபையின் உத்தியோகத்தரின் மேற்பார்வையில் நடைபெறுகிறது. ஆகையால் வண்டி விடுவோர் நகரசபையின் கட்டுப்பாட்டுக்குள் பணியாற்றுகிருன்" இப்படி அவர் தீர்ப்பளித்தார். இதிலிருந்து ஒவ்வொரு வழக்கும் சூழ்நிலையைப் பொறுத்தே தீர்க்கப்படுமென்பது விளங்கும்.

### கார் இரவல் கொடுத்தால்......

ஒரு வேலையாள் இருவருக்குக் கீழ் கடமையாற்ற முடியும். அதாவது ஒருவரின் கீழ் பொதுவில் வேலையாளாகவும் மற்றவரின் கீழ் விசேஷித்த (Special) வேலையாளாகவும் கடமையாற்றலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் நட்டம் விளைத்த பொழுது எவரின் வேலையாள் என்பது தீர்மானிக்க வேண்டியன ஒரு விஷயம். இதற்குரைகல் யாதெனில் அந்த நேரத்தில் யாருடைய கண்காணிப்பில் அல்லது அதிகாரத்தில் அவன் இருந்தான் என்பதே.

ஒருவரின் கீழ் நிரந்தரமாக வேலை பாராவிடினும், அல்லது ஒரு சமயத்தில் தான் வேலை பார்த்தபொழுதும், சம்பளமின்றி இலவசமாகத்தான் கடமையாற்றிய பொழுதும் வேலை பார்ப்பவர் மற்றவரின் வேலையாளாகக் கருதப்படலாம். உதாரணமாக ஒருவர் மோட்டார் வாகனத்தை தன்னுடைய நண்பருக்கு இரவலாக ஓட்டக் கொடுத்தாலும் அல்லது நண்பரைக்

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிய அரசமைப்புச் சட்டத்தில் மதம் பற்றிய கொள்கை நிர்ணயம்

## மன்னர் இன்று வெறும் ஒற்றுமைச் சின்னம்: தளபதி மாக் ஆதரின் சாதனை!

### பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமைகளும் உரிமைகளும்

ஜப்பான் பாராளுமன்றத்திற்கு தேசிய "டயற்" "Diet" என்று பெயர். யுத்தத்திற்கு முன்னர் பாராளுமன்றம் சர்வ வல்லமைபடைத்த மன்னரின் ஒரு கருவியாக இருந்தது. இப்பொழுது மன்னர், மக்களின் குரலின் கருவியாகி விட்டார். இதற்கேற்ப "சக்கிராதிபத்திய டயற்" என்ற பெயர் இப்பொழுது மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது. டயற் ஓர் இருசபைப் பாராளுமன்றம். ஒரு சபையின் பெயர் பிரதிநிதிகள் அவை. House of (Representatives) மற்றதின் பெயர் ஆலோசகர் அவை House of Councillors) பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்கள் 467 பேர். இவர்களின் பதவிக்காலம் 4 வருடம். ஆலோசகர் அவையில் 250 உறுப்பினர்கள் உளர். இவர்கள் 6 வருடம் பதவி வகிப்பார். ஆனால் இவர்களில் பாதித் தொகையினர் 3 வருடம் முடிவில் பதவியிழப்பர்.

#### பிரதமரின் கொள்கைப் பிரகடனம்

பாராளுமன்றத்தின் ஆரம்ப கூட்டத் தொடர் டிஸம்பர் மாதத்தில், 10-ம் தேதிக்குள் ஆரம்பமாக வேண்டும். குறைந்தது வருடத்தில் 150 நாட்களுக்கு சபை கூட வேண்டும். அமைச்சரவை அல்லது இரு சபைகளில் ஏதாவது ஒன்றின் நாலில் ஒரு அங்கத்தவர்கள் கோரினல், விசேஷ கூட்டங்கள் கூட்டுவிக்கப்படும். தேர்தலுக்குப் பின் நிகழும் முதலாவது கூட்டத்தில் பிரதமர் தெரிவு நிகழும் தேர்தலுக்குப் பின் நிகழும் எமது சிம்மாசனப் பிரசங்கத்தைப் போன்று, சபை நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் பிரதமர் ஒரு கொள்கைப் பிரகடனம வெளியிடுவார். இதையடுத்து நடக்கும் விவாதம் ரஸமானதாயிருக்கும்.

#### ஆலோசகர் சபை

ஒரு மசோதா சட்டமாகுவதற்கு இரு சபைகளினதும் அங்கீகாரம் தேவை. ஆனல் இவையிரண்டிலும் பிரதிநிதிகள் சபைக்கே அதிகாரம் அதிகம். வரவு செலவுத் திட்டத்தைப் பிரதிநிதிகள் சபையிற்றன் ஆரம்பிக்க முடியும். பிரதிநிதிகள் அவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், ஒன்று ஆலோசகர் அவையால நிராகரிக்கப்படுமாஞல் அதைச்சட்டமாக்க பிரதிநிதிகள் அவைக்கு வழியுண்டு. அதற்கு ஒன்று செய்ய வேண்டும். அதாவது நிராகரிக்கப்பட்ட தீர்மானத்தை மூன்றில் இரண்டு வாக்குகளால் திரும்ப நிறைவேற்ற வேண்டும். பிரதிநிதிகள் சபை நிறைவேற்றிய ஒரு வரவு—செலவுத் திட்டத்தை 30 நாட்களுள் ஆலோசகர் அவை அங்கீகரிக்க வேண்டும். இன்றேல் அது தானகவே சட்டபூர்வமாகிவிடும்.

எனவே அவசரப்பட்டு எந்த முடிவிற்கும் நாட்டு மக்கள் இழுத்துச் செல்லப்படாது பாதுகாக்கும் ஒரு மன்றமாக விளங்குவதே ஆலோசகர் அவை.

#### உறுப்பினர்கள் உரிமையும் கடமையும்

பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையிற்போற்தான், சமுதாயத்தில் செல்வாக்குள்ளவர்களாக விளங்குகிறார்கள். விசேஷ சலுகைகள் பல இவர்களுக்கு உண்டு. 'அரசாங்கத்திலுள்ள உயர்தர ஊழியர் எவரிலும் குறையாத சம்பளம்', அந்தரங்க காரியதரிசி ஒருவர், தன்நகரில் (டோக்கியோ) குடியிருப்பு வசதிகள் ஆகிய சலுகைகள் ஒரு பிரதிநிதிக்குக் கிடைக்கும். அத்துடன் குற்றங்களுக்குப் பொலீஸாரால் கைதாக்கப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவைக் கூட்டங்களில சமூகமளிக்கும் வண்ணம் கூட்ட நாட்களில் விடுதலை பெறும் உருத்தும் கொண்டிருக்கிறர். இலங்கையில் இட்படியில்லை!

உரிமைகளிருக்கும் இடத்தில் கடமைகளும் உண்டு. கடமைகளை மீறுபவர்களுக்குத் தண்டனையுமுண்டு. சபையில் பகிரங்கமாக எச்சரிக்கப்படல், சபையிலேயே பகிரங்க மன்னிப்புக் கோருதல், குறிப்பிட்ட காலத்திற்குச் சபைக் கூட்டங்களிலிருந்து தடுக்கப்படல் சபையிலிருந்து விரட்டப்படல் ஆகிய நாலு வித தண்டனைகள் ஒரு பிரதிநிதிக்கு விதிக்கப்படலாம். பாராளுமன்றப்பிரதிநிதிகுறைந்தது 25 வயதுடையவராயிருத்தல் வேண்டும். வாக்களிப்பிற்குக் குறைந்தது 20 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

ஜப்பானில் நவம்பர் 20-ல் பொதுத் தேர்தல் நிகழ்ந்ததும் ஆளுங் கட்சி மீண்டும் பதவிக்கு வந்ததும் தெரிந்ததே. பாராளுமன்றம் கடந்த 7-ந் தேதி கூடியது பாராளுமன்ற அமைப்புப் பற்றியும் அரசமைப்பில் மன்னருக்கிருக்கும் இடம் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

#### மன்னர் ஒற்றுமைச் சின்னம்

நெடுங்காலமாக இருந்த பாரம்பரிய அரசமைப்பை மாற்றுவது ஜப்பான் மந்திரி சபைக்கு வருத்தமாயிருந்தது. வெற்றி பெற்றவர்களோ விட்டுக் கொடுப்பதாயில்லை. குறிப்பாக யுத்தம் பற்றிய நிபந்தனையை

செ. குமாரசாமி

சமைப்புத் திருத்தமொன்று முக்கிய கவனத்திற்குரியது; இலங்கையிலுள்ள எமக்கும் பெரிதும் கரிசனைக்குரியது!

"எல்லா மதத்தினர்க்கும் பரிபூரண மத சுதந்திரம் உத்தரவாதமளிக்கப்படும்; அத்துடன் எந்த மதத்தினர்க்கும் எவ்வித சலுகைகளும் காட்டப்படமாட்டாது; எந்த மதத்தினரும் அரசியல் செல்வாக்குப்பெறவும் முடியாது!" சுமார் 5 கோடி பௌத்தர்களுடன் சுமார் 5 லட்சம் கிறிஸ்தவர்கள் வாழும் நாட்டின் அரசியற் சட்டம் இது!

#### சிறகொடிந்த மன்னர்

முன்பு அரசு புரிந்த மன்னர் இன்று அரசமைப்பு விதிகளால் கட்டுண்டு கிடக்கிறர். இங்கிலாந்திலுள்ள அரச பீடத்தைப் போல அரசமைப்பு விதிகள் அனுமதிக்கும் பணிகளையே இவர் புரியலாம். உதாரணமாக, பாராளுமன்றத்தைக் கூட்டுவித்தல், கலைத்தல் அமைச்சர் நியமனத்தை அங்கீகரித்தல், பொதுத் தேர்தலை நிர்ணயித்தல், அயல் நாட்டுத் தூதுவர்களைவரவேற்றல் ஆகியவை. ஆனல் இவற்றைக் கூட மன்னர் தாமாகச் செய்ய முடியாது. பிரதம மந்திரி சிபார்சு செய்யும் பொழுது, அந்தச் சிபார்சையே இத்துறைகளில் மன்னர் நடத்தி வைக்கிறர். இவற்றினல் ஏற்படும் விளைவுகளுக்கும் பிரதமரே பொறுப்பு; மன்னரல்ல! மன்னருக்கு அரசாங்க அதிகாரம் எதுவுமே கிடையாது.

#### நேச நாடுகளின் சாமர்த்தியம்

மன்னரைப் பற்றிய சீர்திருத்தங்களில் நேச நாடுகள் வெகு சாமர்த்தியமாக நடந்திருக்கின்றன!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடித்த இந்த மன்னர் பீடம் அகற்றப்படுவது மக்களிடையே பெரிய சஞ்சலத்தை ஏற்படுத்தியது. இதைக் காரணமாகக் கொண்டு, தோற்ற தலைவர்கள் நேசநாடுகளின் வற்புறுத்தலை ஏற்க முடியாது தயங்கினர்கள். மறுபுறத்தில், ஜப்பானியரின் இந்த வேண்டுகோளுக்கு விட்டுக் கொடுப்பதில் (அமெரிக்காவின் தலைமையில் இயங்கிய) நேச நாடுகளுக்குப் பெரிதும் இலாபமும் இருந்தது. ஹிரோஷிமா, நாகசுக்கி ஆகிய பட்டினங்களில் அணுக்குண்டுகளைப் போட்டு அட்டூழியத்திலிருந்து நேச நாடுகளைக் காப்பாற்ற ஒரு வழி தேவைப்பட்டது. குண்டு போட்டதினல் தாம் விரும்பிய இலட்சியத்தை அடைந்தன நேச நாடுகள். குண்டுகளினல் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு ஓடி ஓடி உதவி அளித்து அமெரிக்கா தனது பரோபகாரத்தையும் காட்டி வைத்தது. இதனல் ஜப்பானியரின் துவேஷத்தைச் சாந்திப்படுத்த முயன்றது; வெற்றி கண்டது.

#### மன்னரும் மாக் ஆதரும்

மக்கள் அமெரிக்கா பால் கொண்டிருந்த துவேஷத்தைக் கட்டுப்படுத்துவதில் மன்னர் என்ற தெய்வத்தைப் பயன் படுத்தினர்

(13ம் பக்கம் பார்க்க)



ஜப்பானிய அரச குடும்பம்

#### மன்னரும் அரசமைப்புத் திட்டமும்

ஜப்பானில் இன்று இயங்கும் அரசியற் திட்டம் 1947, மே மாதம் நடைமுறைக்கு வந்தது. 2-வது உலக யுத்தத்தில் வெற்றி பெற்ற நேச நாடுகளின் (அமெரிக்க) தளபதி மாக் ஆதரால் 1945ல் தோல்வியுற்ற ஜப்பான் மேல் திணிக்கப்பட்ட அரசமைப்பு இது. நேச நாடுகள் ஜப்பானிடம் கொடுத்த நகல் திட்டத்தில் குறிப்பாக 3 அம்சங்களை ஏற்றுக்கொள்ளும்படி மாக் ஆதர் வற்புறுத்தினர். அவையாவன:

(1) பொது மக்களிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்து மன்னர் ஒரு சின்னமாக மாத்திரம் இருக்க உடன்படல் வேண்டும்.

(2) எக்காலத்திலும் ஜப்பான் யுத்தத்தில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

(3) ஒரே அவைப் பாராளுமன்றம் நிறுவ வேண்டும்.

யும் ஏற்றுக்கொள்ளத் தயங்கினர்கள். இதில் தயக்கம் காண்பித்தால் மன்னர் பீடத்தை முற்ருக ஒழித்துக் கட்டி விடுவதாகவும் நேச நாடுகள் பிடிவாதம் காட்டின. ஜப்பானுக்கெதிராகப் போரிட்ட சோவியத் ருஷ்யாவும் அவுஸ்திரேலியாவும் மன்னரை முற்றிலும் அகற்றுவதை பெரிதும் வற்புறுத்தின. எனவே ஜப்பானிய கௌரவம் மீண்டும் தலைபணிய வேண்டியதாயிற்று. யுத்தத்திற்கு முன்பு, மன்னர் அரசாள உதவியன, மந்திரி சபையும் பாராளுமன்றமும். இப்பொழுது மந்திரி சபையும் பாராளுமன்றமும் நாட்டைப் பரிபாலிக்கும் பொழுது, மன்னர் ஜப்பானின் ஒற்றுமைச் சின்னமாக மாத்திரம் விளங்குகிறர். தெய்வ அம்சமெனப் பூஜிக்கப்பட்ட மன்னரின் இன்றைய [illegible] மன்னரிடமிருந்து "தெய்வத்தன்மை" ஒதுக்கப்பட்டதுடன் தொடர்புடைய அர

## தொழிலாளர் சேமலாப......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றுங் கட்சிக்காரணுக வேண்டும். தொழிலாளர்களின் எதிர்காலப் பாதுகாப்புக்காகவே இருக்கிறது இந்நிதி. இன்றைய தொழிலாளிகளின் நாளைய நாட்களைப் பாதுகாப்பதில் அரசாங்கத்திற்கும் ஒரு பங்கு உண்டு. தொழிலாளர் சேம நிதியிலிருந்து அரசாங்கம் பணம் பெறுகிறது. அந்நிதி திரட்டப்படுவதில் அரசாங்கத்திற்குப் பங்கிருக்காவிட்டால் அந்த நிதியைப் பயன்படுத்துவதில் மாத்திரம் அரசாங்கம் எவ்வாறு பங்கு கொள்ள முடியும்?

#### அரசாங்கம் பங்கெடுக்க வேண்டும்

ஏனைய முற்போக்கு நாடுகளில் தொழிலாளர் சேம நிதி திரட்டப்படும்போது அந்நிதிக்கு அரசாங்கமும் உதவுகிறது. இலங்கையும் முற்போக்கான நாடு. எனவே பெரிதுவாகத் தொழிலாளர்களின் சேம நலன்களைக் கவனித்துப் பாதுகாக்கவும், குறிப்பாக அவர்கள் வேலை செய்ய முடியாத அல்லது வேலை செய்வதை நிறுத்த வேண்டிய நிலைமையில் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கவும் நிறுவப்பட்டிருந்த நிதிக்கு அரசாங்கம் கண்டிப்பாக நிதி வசதி அளிக்க வேண்டும். அரசாங்கம் இந்நிதிக்கு ஏதோ "கடன்" உதவுவதாகக் கூறப்படுகிறது. இவ்வுதவி பின்னல் திருப்பிக் கொடுக்கப்படும் "கடனக" இருக்கக் கூடாது. ஆரம்பத்திலே ஏற்படும் கட்டிடச் செலவுகள் ஊழியர் வேதனம் ஆகியவற்றிற்குத் தேவையான ஆரம்ப நிதி உதவியைப் புரிவது தனது கடமை என்றே அரசாங்கம் கருத வேண்டும். அத்துடன், திட்டவட்டமான ஒரு அடிப்படையில் ஒவ்வொரு தொழிலாளியின் பெயரிலும் சேம நிதிக்கு ஏதாவது ஒரு தொகையை அரசாங்கம் வழமையாக உதவிக்கொண்டு வர வேண்டும்.

#### உரிய வழியில் செலவு

மூன்றுவதாக, இந்தச் சேம நிதியைத் தான்தோன்றித்தனச் செலவுகளுக்குப் பயன்படுத்தக்கூடாது. இலவச பஸ் பிரயாணம், 15 சதத்திற்கோ 20 சதத்திற்கோ அரிசி விற்பது போன்ற விஷயங்களில் இப்பணம் விரயமாக்கக்கூடாது. ஏதும் ஒரு வழியில் உற்பத்தியை அதிகரித்துச் செல்வத்தைப் பெருக்கும் முதலீடுகளிலேயே இப்பணம் ஈடுபட வேண்டும். இத்தகைய முதலீடுகளிலிருந்து கிடைக்கும் இலாபம் நாட்டை இலாபகரமான வழிகளில் அபிவிருத்தி செய்யவும் அதனல் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவுமே உபயோகமாக வேண்டும். ஆனையைக் கட்டித் தீனி போடுவது போன்று, நட்டத்தில் ஓடும் பல கைத்தொழில்களில் முதலீடு செய்து இப்பணத்தை வீணக்கக்கூடாது. நாட்டுக்கு இலாபமீட்டும் தேசிய அபிவிருத்திக்கே அரசாங்கம் இதைப் பயன்படுத்த வேண்டும். இதனல் தான் நிச்சயமான இலாபம் ஏற்படும். இப்படி உபயோகித்தால்தான் தொழிலாளர்களுக்கு முதுமையில நிச்சய பாதுகாப்புக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணரும் சாதி வேற்றுமையும்:

# மற்றவர்கள் சிரிக்கிருர்களே என்ருவது நம்மவர்கள் திருந்தட்டும்

## பண்டிதரின் மாஸ்கோ பேச்சு—துறிக்கோள் இதுதான்

மாஸ்க்கோவுக்கு போய் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமிழ் நாட்டில் உள்ள சாதி வேற்றுமைக்கு பிராமணர்கள்தான் காரணம் என கூறி வந்ததை எதிர்த்து சுதந்திரன் கருத்தரங்கத்தில் சிலர் எழுதியிருந்ததைப் படித்தேன். பண்டிதர் கா. பொ இரத்தினம் பேசியது பெரிதும் வரவேற்கத்தக்கது: இதுகாலம்வரை எத்தனையோ கூட்டங்கள் நடத்தியும் எத்தனையோ பிரச்சார நாடகங்கள் வைத்தும் சொல்லி வந்த கருத்தை எம்மவர்கள் ஏற்

வெண்சங்குவேள்

றுக்கொள்ளாதபோது இனிப் பிறநாட்டார் சிரித்தாவது திருந்தட்டும் என்ற கருத்துடன் வள்ளுவனைப் போல் உள்ளதைத் தெள்ளத் தெளியச் சொல்ல வேண்டிய முறைப்படி சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லி வந்தார் பண்டிதர் இரத்தினம். அது பாராட்டத்தக்கது.

பழம் பெருமையைச் சொல்லிச் சொல்லி வர வர இன்னும் ஒற்றுமை அற்ற தன்மையும் உணர்ச்சிக் குறைவும் வளர்ந்து கொண்டே போகின்றன. இன்றைய எங்கள் சிறுமையை சொன்னாலாவது, "வெளிநாட்டினர் எல்லாரும் எம் நாட்டில் உள்ள சாதிப் பாகுபாட்டைத் தெரிந்துகொண்டிருக்கிருர்களே, இதை ஒழிக்க என்ன வழி? இனியாவது எம்முள் உள்ள சாதிப பிரச்சினையை விட்டுச் சகோதரர்களாக வாழ்வோம் என்று நம்மவர்கள் எண்ணட்டும்! புதிய நிலை பிறக்கட்டும்" என்று தான் மாஸ்கோவிலே போய் பண்டிதர் இரத்தினம் சொல்லி வந்தார். அவர் சொன்னதைப் பத்திரிகையிலே பார்த்தவுடன் மீசை துடிப்பவர்கள், படபடப்பவர்கள் ஏன் அவர் சொன்ன விஷயத்தை இதுகாலவரை திருத்த முற்படவில்லை? இனியாவது முயல்வார்களா?

சாதி வேற்றுமையை பிராமணர்கள் கொண்டு வரவில்லை தமிழ் நாட்டுக்கு என்று வாதாடுகிருர்கள்; சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் உண்மை விளங்கும். இன்றைக்கு எத்தனையோ நூற்ருண்டு காலத்துக்கு முன் சிறப்புடன் வாழ்ந்த தமிழன் எந்தக் காலத்திலிருந்து பின்னிலை அடைபவனுக மாறினன்? ஆரியர்களாம் இந்த பிராமண வகுப்பினர் எம் நாட்டில் நுழைந்த அன்றிருந்தே வினை வந்தது. நமது (தமிழர்) சரித்திரமும் குலத்தை பற்றிக் குறிப்பிடுவதாக ஒருவர் எழுதினர். அந்தக் குலம் எதுவென்று அவருக்கு தெரியவில்லை போலும்! திருக்குறளிலே உள்ள குலம் தொழிலைக் குறிக்கிறது; மனிதன் பிறப்பால் வேற்றுமை பட்டவனல்லன் என்கிறது. ஒளவையாரின் பாடல் "இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர்" என்கிறது. சிலப்பதிகாரத்தின் குலமோ ஒழுக்கத்தைக் குறிக்கிறது; சாதியைப்பற்றி அல்ல.

சுதந்திரன் கருத்தரங்கம்


நான் விரும்புவது நெஸ்டோமோல்ட்

ஏனெனில், அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது....




குழந்தைகள், வாலிபர், முதியோர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்ட்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவையாவும அதில் அடங்கியிருப்பது தான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனிரகம்.

நெஸ்டோமோல்ட் --ஒரு உன்னத பால் ஆகாரம் இது. மால்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற் கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஒரு டானிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

தயாரிப்பாளரும் உத்தரவாதமளிப்போரும்

நெஸில்ஸ்

சாம்பிள் இனும்
நெஸ்டோமோல்ட் சாம்பிள் ஒன்றைப் பெறுவதற்கு தபாற் செலவுக்காக 25 சத முத்திரையுடன் உங்கள் பெயரையும் விலாசத்தையும் எமக்கு எழுதி அனுப்புக.

நெஸில்ஸ் புரொடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட், தபாற் பெட்டி 189, கொழும்பு.

நெஸ்டோமோல்ட்

வைட்டமின் B. அடங்கியது.


## ரூபா 1000/- பரிசு நாவல் போட்டியில்

யாழ் தமிழ் இலக்கிய மன்றம் நடத்தும் நாவல் போட்டியில் ரூபா 1000/- பரிசு வழங்குவதென ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மன்றத்தின் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது. அதில் பேசிய 'கலைச்செல்வி' ஆசிரியர் திரு சி சரவணபவன் பின்வருமாறு கூறினர்:—

'ஆக்க இலக்கியம் படைத்து வரும் எமது எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தி இலங்கையில் தேசிய இலக்கியம் தோன்றுவதற்கு வழி வகுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இலங்கைச் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ரூ. 1000/- பரிசு வழங்குவதன் மூலம் யாழ் த. இ. மன்றம் ஒரு நாவல் போட்டியை நடத்த முன்வந்துள்ளது."

திரு இ. சிவலிங்கம் பேசுகையில், இந்தப் போட்டியில் பரிசு பெறும் நாவல் உலகத்தின் தலைசிறந்த நாவல்களுடன் சரிநிகர் சமானமாக நிற்க வேண்டும் என்றும் அப்படியான உயர்ந்த படைப்புகளை எழுத்தாளர்கள் அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## திருகோணமலை நிக்கல்சன் லொட்ஜ்

திருகோணமலை நிக்கல்சன் லொட்ஜ் பற்றி சாம்பல்தீவு கிராமச் சங்கக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது இந்த லொட்ஜ் பற்றிச் சுதந்திரனில் பிரசுரமாகிய செய்தி வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் முதியோர் இல்லம் அமைப்பதற்கு அந்த லொட்ஜைத் தந்து உதவும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. இது பற்றி சாம்பல் தீவு கிராமச் சங்கத் தலைவர் திரு வ. நா. தம்பிராசா திருமலைப் பிரதிநிதியைச் சந்தித்துப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனுக்கு புதியவள்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பழையஉருவம். அருணாவின் இடையை 'அவன்' அணைத்த படி நடக்கிறான். 'அருணா' அவனைக் கொஞ்சாக் குறையாகச் செல்கிருள். அருணாவின் கன்னத்தை அவன் கிள்ளுகிறான், அவள் குழைகிருள். அவன் அவளை இறுகக அணைக்கிறான், அவள் அவனோடு ஒன்றியே போகிருள்......

சீ! சீ! அருணா பின்தொடர முன்னே சென்ற திருச்செல்வம் முகத்தைச் சுளித்த அதே நேரத்தில் ஒரு முடிவுக்கும் வந்து விடுகிறான்.

●

இப்போதெல்லாம் திருச்செல்வம் அருணாவைச் சந்திப்பதற்கு அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. வரவர அவன் அவளைச் சந்திப்பதைத் தவிர்த்துக்கொண்டே வந்தான். காத்திருந்து காத்திருந்து அருணா ஏமாற்ற முற்ருள். திடீரென்று திருச்செல்வத்திடம் ஏற்பட்ட இந்த மாறுதலின் காரணத்தை அறிவதற்கு அவளுக்கு அதிக நாள் ஆகவில்லை.

அன்றைய அவர்களின் கடற்கரைச் சந்திப்பு, அன்று அவள் கூறிய உண்மைகள், அப்போது அவன் முகத்தில் ஏறி நின்ற வெறுப்புணர்ச்சி, அதன் பிறகு அவளோடு அவன் பழகிக் கொண்ட விதங்கள் எல்லாம் அருணாவுக்குச் காட்சி சொலல ஓடிவந்தன.

ஆமாம் அப்படித்தான் இருக்க வேண்டும்.

அருணா தனிமையில் புழுங்கிக் கொண்டிருந்த இந்த வேளையில்தான் அங்கு திடீரெனத் தோன்றினான திருச்செல்வம். வந்த திருச்செல்வம் தாமதிக்க வில்லை. "அருணா, என்னை மன்னித்துவிடு, எங்களின் காதலுக்கு எனது அம்மாவும் அப்பாவும் ஒருபோதும் இணங்க மாட்டார்களாம். அவர்களை எதிர்த்துப்போக எனக்கு முடியவில்லை ஆகவே எங்கள் காதலிலும பொருளில்லை" என்று கூறியவன் அங்கிருந்து சென்றபோது அவள் முகத்தைக்கூட ஏறெடுத்துப் பார்க்க வில்லை.

தெரிந்ததுதானே?

இருந்தாலும் அப்படி அவன் நேரே வந்து சொல்வான் என்று அவள் எண்ணவில்லை ஒரு வினாடி அவள் இதயத்தை யாரோ மறுக்கிப் பிழிந்தார்கள். பிறகு அலரித்தி அதை ஆற்விடுவது போன்ற உணர்வு, அதைத் தொடர்ந்து அமைதி, அமைதி.

சுமையிறங்கிய அருணா, தெருவில் இறங்கி எதற்காகவோ நடந்தாள். அப்போது அவளுக்குச் சற்று முன்னால் ஒரு ஜோடி கலகல வென்ற சிரிப்போடிணைந்து நடந்து கொண்மருந்தது. அவள் கூர்ந்து கவனித்தாள். ஒட்டாக் குறையாகச் சென்று கொண்டிருந்த அந்தக் காதல் ஜோடியாரோ? மீண்டும கூர்ந்து நோக்கினாள். திருச்செல்வமும் அவன் புதுக்காதலியும்!

அவனின் அந்தக் காதலி?

கமலி!

வியப்பு அருணாவை விழுங்கியது.

கமலி திருச்செல்வத்துக்குப் புதியவள். ஆனால் காதலுக்கு......?

# ஜப்பானிய...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக் ஆதர்! பயன் கிடைத்தது. அத்துடன் தமது இலாபத்தையும் தேடிக்கொண்டன நேசநாடுகள். மன்னரின் தெய்வீகத்தைப் பறித்து தமது ஜனநாயகத்தைப் புகுத்தியதுடன் அமெரிக்க தளபதி மாக் ஆதர் மன்னருடன் நின்று படமும் பிடித்துக்கொண்டார்! இச்சம்பவம் மக்களை அதிர்ச்சியடையச் செய்தது. இந்த அதிர்ச்சியை ஆதற்றுவதற்கும் அமெரிக்கா அதே மன்னரையே பயன் படுத்திற்று!

## ஒரு சகாப்தத்தின் மறைவு

கடந்த காலம் எப்படியானாலும் இன்று ஜப்பானில் ஜனநாயகம் மலர்ந்து வருவது வரவேற்கக் கூடியதே. மன்னர்களின் சகாப்தம் மறைந்து வருகிறது. மங்கையரிலும் மது வெறியிலும் மதியிழந்த நிலையில் கூட எகிப்து நாட்டின் மன்னன் பருக் 1952-ல் முடிதுறந்த பொழுது கூறிய உண்மை ஒன்று இங்கு குறிப்பிடத்தகுந்தது.

"ஐந்தே ஐந்து மன்னர்கள் தான் உலகத்தின் முடிவு வரை பதவியிருப்பார்கள். மற்றவர்கள் அனைவரும் என்றே ஒரு நாள் மறைய வேண்டியவர்களே! பதவியில் நிரந்தரமாக இருக்கப் போகிறவர்களுள் ஒருவர் இங்கிலாந்தின் மன்னர். மற்ற நால் வரையும் தான் நாம் சீட்டாட்டத்தில் தினமும் சந்திக்கிறோம்" என்றார் பருக்!

# விவேகானந்தரும்...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமிகள்:— நான் எவ்வளவு காலம் சிறைப்பட்டிருத்தல் வேண்டுமோ?

இன்ஸ்பெக்டர்:— ஆ! ஒரு வாரம் அல்லது பத்து நாள் இருந்தாற் போதும உமமிடம் குற்றமொன்று மில்லையானல் உம்மை அனுப்பி விடுவோம்.

சுவாமிகள்:— (வருத்தத்துடனும், ஆவலுடனும்) "ஒரு மாதம", "இரண்டு மாதம்" என்று விதிக்கக்கூடாதா சாகிப்பவர்களே! நீங்கள் நீடித்த வாழ்வும் ஹவில்தார் உத்தியோகமும் பெறும்படி கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

இன்ஸ்பெக்டர்:—

'ஏன் ஐயா, அங்ஙனம் கூறுகின்றீர்'

சுவாமிகள்:— சாகிப்பவர்களே, உலகத்தில் காலங்கழிப்பது அரியதோர் வேலையாய் முடிந்திருக்கின்றது. நாள் முழுதும் அலைந்து திரிந்தாலும் உணவு கிடைக்கின்றதில்லை. தாங்கள் என்னைக் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டால் நாடோறும் எனக்கு இரண்டுதடவை கெட்டியான ஆகாரம் கிடைக்கும். அப்போது யான் திருப்தியடைவேன். இந்தப் பெருதவிக்

# கலைஞர்கள், எழுத்தாளர்கள்....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் திரு எப். எக்ஸ். ஸி. நடராஜா தமது குறிப்புரையில் ஒரு விஷயத்தை அழுத்திச் சொன்னார். அவர் கூறியதாவது:—

"தமது மாமனாரிடம் நன்ருகத் தமிழ் கேட்டுப் படித்தவர் திரு பார்த்தசாரதி. அவரிடமிருந்து கொஞ்சம் பண்பையும் இங்கிதத்தையும் பெற்றிருந்தால் எவ்வளவோ சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். இது என்னுடைய கருத்து" என்றார்.

## தாய் நாடும சேய் நாடும்

அவர் மேலும் பேசுகையில் "தாம் முற்போக்கு உடையவர்கள் என்று கூறிக்கொள்ளும் ஒரு கோஷ்டியினர் தமிழ் நாட்டைத் தாய்நாடு என்று சொல்வது தவறு; கூடாது என்கிறார்கள். இது சுத்த அறியாமை என்பது என்னுடைய கருத்து தமிழ் நாடு தாய் நாடு; ஈழநாடு சேய்நாடு நான் எப்பொழுதும் இதைத்தான் சொல்லுவேன்" என்று கூறினார்.

## நீண்ட நேரம்.........

கூட்ட ஆரம்பத்தில் திரு பிரேம்ஜி வரவேற்புரை நிகழ்த்தினர் முடிவில் திரு காவலூர் இராசதுரை நன்றியுரை கூறினார். திருவாளர்கள் எச். எம் பி மொஹிதீன், தேவராஜ் கணேசலிங்கன், ராமநாதன், முகமது சலீம், இளங்கீரன் முதலானோரும் பேசினார்கள். மாலை 6-00 மணியளவில் தொடங்கிய கூட்டம் 10-15 வரை ஏச்சு, பேச்சு, ஆரவாரம், அமைதியின்மைக்கிடையே காரம் இருந்தும் இல்லாமலும், சாரம் கெட்டும் கெடாமலும் எப்படியோ நடந்து முடிந்தது.

"தமிழகத்து எழுத்தாளர் ஒருவர் முன்னிலையில் வித்துவான் ஒருவரின் தலைமையில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டம் முற்போககுக் கூட்டமா, முட்டாள் போக்குக் கூட்டமா? ஒன்றுமே புரியவில்லையே!" என்று கூட்டத்தினின்று வெளியேறும் போது திரு பார்த்தசாரதி இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரிடம் கூறியது காதில் விழுந்தது.

காக தங்களது பெருந்தன்மையையும் துரைத்தனத்தாரையும் வாழ்த்துவேன்.

இன்ஸ்பெக்டர் சுவாமியவர்களைத் திறந்த கண்களோடும் பார்த்து வெட்கித் தலை குனிந்து தம்மிருப்பிடஞ் சென்றார்.

—ஏ. வர்ணன்.

திருமலை

டிசம்பர் 16-ம் தேதி

வெள்ளிக்கிழமை முதல் குதூகலமான ஆரம்பம்!

எல்பின்ஸ்டன் (கொழும்பு)
ரெக்ஸி (வெள்ளவத்தை)
வின்சர் (யாழ்ப்பாணம்)

மற்றும் 5 திரைகளில்

* சிவாஜி கணேசன்—* பத்மினி
எஸ். எஸ். ராஜேந்திரன்—எம். என். ராஜம்
கே. ஏ. தங்கவேலு
முதலியோர் நடித்த



தெய்வப் பிறவி

மகத்தான 9-வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

சிவாஜி கணேசன்—சௌகார் ஜானகி—ச. வி. சரோஜா
எஸ். வி. ரங்கராவ்—கண்ணாம்பா—அசோகன் நடித்த

படிக்காத மேதை

வெற்றிகரமான 7-வது வாரம்!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

ஜெமினி கணேசன்—சரோஜாதேவி—தங்கவேலு
எம். என். ராஜம்—நம்பியார்—டி. கே. பகவதி நடித்த

எல்லோரும் இந்நாட்டு மன்னர்

வெற்றிகரமான 2வது வாரம்!

சென்ட்ரல் [கொழும்பு]

தினசரி 3 மணி, மாலை 6 15, இரவு 9-30.
சனி, ஞாயிறு நான்கு காட்சிகள் 10, 3, 6-15, 9-30.

காதல், சோகம், காதுக்கினிய பாடல்கள், கருத்தைக் கவரும் நடனங்கள் அத்தனையும் ஒருங்கே அமைந்த உன்னத ஹிந்திச் சித்திரம்

பம்பாயில் பல வாரங்களாக ஓடி வெற்றி வாகை சூடிய திரை ஓவியம்

மீனாகுமாரி—ராஜ்குமார்
ஹெலன்—ஓம்பிரகாஷ்
மற்றும் பலர் நடித்த

தில்-அபனா
அவுர்பிரீத்பராய்
[ஹிந்தி]

தொடர்ந்து வெற்றிகரமான
7-வது வாரம்!

முருகன் [ஜிந்துப்பிட்டி]

ஜெமினி கணேசன், பத்மினி
ராகினி, பாலையா சந்திரபாபு, சுகுமாரி,
எஸ். வி. சுப்பையா, டி. பாலசுப்பிரமணியம்,
முதலியோர் நடித்த

பொன்னு விளையும் பூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவருக்கு ஒரு சொல்:

# தேகப் பயிற்சி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்பது ஒரு பழமொழி மாணவன் ஒருநாளையும் வீணுகக் கழிக்கலாகாது. ஓயாது சுவாசித்துக்கொண்டிருப்பது பிராணிகளின் செயலாயிருப்பது போன்று ஓயாது அறிவை வளர்த்துக்கொண்டிருப்பது மாணவன் ஒருவனுடைய செயலாகும். அக்காரணத்தை முன்னிட்டே இப் பழமொழி வந்துள்ளது.

இதற்கு அனுபந்தமாக இக்காலத்து மாணவர்கள் இன்னொரு சீரிய கோட்பாட்டைத் தங்களுக்குத் தாங்களே வகுத்துக்கொள்ள வேண்டும். ஓடி விளையாடாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்பது அக்கோட்பாடாம். மாணவன் ஒருவனுக்கு நாள்தோறும் ஓடி விளையாடுவது நாள்தோறும் ஓதுவதற்கு நிகராகும். தனியாக அறிவை மட்டும் வளர்த்துக்கொண்டு போகிறவன் நிறை வாழ்வு வாழமாட்டான். அறிவிற்கு நிகரானது அல்லது ஒரு விதத்தில் அறிவுக்கு மிக்கது ஆற்றல் என்பதை மாணவன் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்

இடைக்காலத்து மாணவர்களில் பெரும்பான்மையோர் ஓதுதலிலும் அறிவை வளர்ப்பதிலுமேயே கண்ணுங்கருத்துமாயிருந்து விட்டனர். காலமெல்லாம்மனே முயற்சியில் ஈடுபட்டிருப்பவனே தலை மாணவன் எனக் கருதப்பட்டான். பள்ளிக்கூடத்து விளையாட்டுக்களிலும் தேகப் பயிற்சிப் பந்தயங்களிலும் கலந்துகொண்டவர்கள் மிகச் சிலர். அப்படிக் கலந்துகொண்டவர்கள் பெரிதும் அறிவுத் துறையில் பின்வாங்கி நின்றவராயினர். படிப்புக்குத் தகுதியற்றவர்களே விளையாட்டில் வல்லவர்களாக மிளிர்ந்து வந்தனர் என்னும் கொள்கையும் அப்பொழுது இருந்து வந்தது. அதில் ஓரளவு உண்மை இருந்திருக்கலாம். ஆனால் அக்கொள்கையையும் நடைமுறையையும் இக்காலத்து மாணவர்கள் அறவே மாற்றிவிட வேண்டும்.

பறவைக்கு இரண்டு சிறகுகள் இருப்பதுபோன்று மனிதனுக்கு அறிவும் ஆற்றலும் இரண்டு சிறகுகளுக்கு நிகர் ஆக வேண்டும். வெறும் அறிவுபடைத்திருப்பவன் அரை மனிதன். வெறும் ஆற்றல் படைத்திருப்பவன் அரை மனிதன். இரண்டும் சேர்ந்து அமையப்பெற்றிருப்பவன் நிறை மனிதன் என்பது எல்லோருக்கும் இன்றியமையாத செயலாய் இருந்து வருகிறது. ஆனால் விளையாடுவதை எல்லோரும் ஊக்கத்துடன் செய்து வருவதில்லை. சிலருக்கு விளையாட நேரமில்லை என்கின்றனர். வேறு சிலருக்கு விளையாட வசதியில்லை என்கின்றனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத செயல்களாகிய உண்பது உறங்குவது போன்றவைகளுக்கு நேரம் ஒதுக்கி வைக்கப்படுவது போன்று விளையாடுவதற்கும் நேரம் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். வாழ்வுக்கு நல்ல அஸ்திவாரமாவது விளையாட்டு. சின்னஞ்சிறு வயதில் நன்றாக ஓடி ஆடி விளையாடாதவர்கள வாழ்வைக் குலைத்துவிடுவார்கள். விரைவில் விருத்தாப்பியத்தை வரவழைத்துக் கொள்ளுவார்கள். அதிவிரைவில் அவர்களிடத்துள்ள அறிவும் மங்கிப்போயவிடும். அத்தகைய துர்ப்பாக்கியத்தை எந்த மாணவனும் வலியத் தேடிக்கொள்ளலாகாது உற்சாகத்துடன் நாள்தோறும் விளையாடி வருபவனே தனக்குற்ற வாழ்வை நன்கு நடாத்தி வருபவன் ஆகிறான்.

விளையாடுதற்கு வேண்டிய வசதிகள் மாணவர்கள் எல்லோருக்குமே வாய்ப்பதில்லை. விளையாட்டு மைதானங்கள் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டாயமாக அமைந்திருக்க வேண்டும் என்பது கல்வி இலாகாவின் நியதியாகும். ஆனால் பட்டணங்களிலுள்ள பள்ளிக்கூடங்கள் அனைத்துக்கும் விளையாட்டு மைதானங்கள் அமைந்ததில்லை ஜனப்பெருக்கால் மைதானத்தை விரிவடையச் செய்வதற்கு இயலாது போய்விடுகிறது. அடைந்துள்ள விளையாட்டு மைதானங்களைச் சரியாகப் பயன்படுத்தி வந்தால் ஓரளவு மைதானக் குறைபாட்டுக்கு ஈடு செய்துவிடலாம், மனமுண்டானால் இடமுண்டு என்பது முதுமொழி. எப்படியாவது தேகப் பயிற்சி செய்தேயாக வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டால் அத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உபாயங்கள் பல இருக்கின்றன. தண்ணீருக்குள் அமிழ்த்தப்படுகிறவன் எப்படியாவது சுப்பித்துக் கொண்டு காற்றின் பொருட்டு மேலே வர முயலுகிறான். அதே மனப்பான்மை விளையாட்டினிடத்தும் வர வேண்டும். உண்ணாது உறங்காது ஒருநாளும கழிவதில்லை. அதே பாங்கில் விளையாடாது மாணவனுக்கு ஒருநாளும் கழியலாகாது.

நம் நாட்டுக்குரிய விளையாட்டுக்கள் பல இருக்கின்றன. மேல நாடுகளிலிருந்து நம் நாட்டினுள் வந்துள்ள ஹாக்கி, புட்பால், கிரிக்கட் போன்ற விளையாட்டுக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு விளையாட்டிலும் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. சில விளையாட்டுக்களில் மாணவர் தங்கள் தனித் திறமையைக் காட்டுதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. நமது தேசிய விளையாட்டுக்களிற் பெரும்பான்மை ஒவ்வொரு மாணவனும் தனது தனித் திறமையைக் காட்டுதற்கென்றே அமைந்துள்ளன ஆனால் மேல்நாட்டு விளையாட்டுக்களிலோ மற்றவர்களுடன் சேர்ந்து முயலாவிட்டால் விளையாட்டில் எப்பொழுதும் வெற்றியேற்படாது மற்றவர்களுடன் சேர்ந்து முயலுதல் வாழ்க்கைக்குரிய பெரிய பாடமாகும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே' என்பது வெறும் கவிதை ரசமாக நின்றுவிடலாகாது. இதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு மேல்நாட்டு விளையாட்டுக்கள் முற்றிலும் இன்றியமையாதவைகள். எனவே இக்காலத்திய மாணவர்கள் தேசிய விளையாட்டுக்களையும் வெளிநாட்டு விளையாட்டுக்களையும் சமரசப்படுத்தி இரண்டிலும் திறமைவாய்ந்தவர்கள் ஆக வேண்டும்.

உடல் முழுதினின்றும் வியர்வை கொட்டும் வரையில் வெட்ட வெளியில் ஓடியாடி விளையாட இளைஞர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். விளையாட்டுக்கு மைதானமே அகப்படாது போய் விடுமிடத்து மாணவர்கள் இரண்டு இரண்டு பேராக அணி வகுத்து ஊரெங்கும் அமைந்துள்ள பாதைகளில் ஒரு மருங்கில் நெடுந்தூரத்துக்கு சிற்றோட்டம் ஓடிப் பழகலாம். தனியாக ஒருவன் அப்படி ஓடுகிறபொழுது அதை விபரீதச் செயலாகக் கருதிப் பாதையிலுள்ளவர்கள் வேடிக்கை பார்ப் [illegible] ளும் அவர்கள் ஒருவனை [illegible] செய்யலாம். ஆனால் பல பேர் அணிவகுத்து ஓடும் பொழுது அது காண்பதற்குரிய நல்ல காட்சியென்று அதைப் பாராட்டிப் பல பேர் பார்த்துக்கொண்டிருப்பார்கள். எவ்விதத்திலும் விளையாட்டு என்னும் வாழ்க்கைக்குரிய அரிய பயிற்சியை மாணவர்கள் புறக்கணித்துவிடலாகாது. பெருக்கத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபட அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர்.

—தர்மசக்கரம்

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி", C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 1.

பெயர்..................................................

பாடசாலை ..............................................

விலாசம் ...............................................

..........................................

.............................. ..............................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## இயற்கைப் பூங்கா

எத்தனையோ படைத் திட்டாள்
இயற்கை—மாதா
எழிலுருவம் அத்தனையும்
எண்ணம் கொள்ளா(து)
கற்பனையிற் சிருஷ்டிப்பர்
கவிஞர்—அள்ளிக்
கலைக்கூடம் ஆக்கிடுவர்
கலைஞர் கற்று
விற்பன்ன ராகிடுவர்,
மேலோர்—காலம்
விரைந்தோடும் அத்தனையும்
மாற்றங் கொள்ளும்,
கற்றவரும் மற்றவரும்
கருதா—வெள்ளக்
காடென்னு மெண்ணமடா
இயற்கைப் பூங்கா

●

பொங்குகடல் அத்தனையும்
பூங்கா—நின்று
பொழிநிலவு விண்தாரை
இயற்கைப் பூங்கா!
தங்கமுலாம் பூசுமுக
வானம்—வெள்ளித்
தாரையென வீழுமழைச்
சாரல் பூங்கா!
சங்கமொலி பேரிடிமின்
சாரம் —வண்ணச்
சருகுதிரும் சோலைமலை
இயற்கைப் பூங்கா!
அங்கமெலாம் பொங்குமடா
இயற்கை சிந்தும்
அழகுண்டு வேறெங்கே
அங்கும் பூங்கா!

●

கண்ணிரண்டு மோர்பூங்கா!
கருத்தும்—வண்ணக்
கைவேலை யத்தனையும்
எண்ணப் பூங்கா!
பெண்ணுள்ளம் ஓர்பூங்கா!
பிஞ்சும்—பிள்ளை
பேசுகின்ற மழலையுளம்
பிறும் பூங்கா!
தண்ஓடை யோர்பூங்கா!
தெய்வம்—சிந்தை
தெளிந்தோடும் அருள்த்தேனும்
பக்திப் பூங்கா!
எண்ணமெலாம எண்ணற்ற
பூங்கா!—வேறு
எங்குண்டு அங்கெல்லாம்
இயற்கைப் பூங்கா!

—பாண்டியூர் கு. கணபதிப்பிள்ளை.

## விவேகானந்தரும் போலீஸ் அதிகாரியும்

வங்காளத்தார்க்கு இயல்பாய் அமைந்திருக்கும் நவீன குணமுடைய விவேகானந்த சுவாமிகள் தேச யாத்திரை செய்யும் போது பிகார் வழி செல்ல நேரிட்டது. அக்காலத்தில் அவ்விடத்திய பயிர்க் குடிகளைப் பயப்படுத்துமாறு சில கெட்ட பிள்ளைகள் "அரசாங்கத்தார் மாமரங்களுக்குத் தீர்வை விதிக்க நிச்சயித்திருக்கின்றனர்" என்று கபடமாய்த் தெரிவித்து இராத்திரி வேளைகளில் மாந்தோப்புகளிலிறங்கி ஆயிரக்கணக்கான மரங்களின் மீது களிமண்ணால் அடையாளப்படுத்தி வந்தனர். துரைத்தனத்தாருக்கு இம்மாயஞ்செய்தவரைக கண்டுபிடிக்க இயலாமற் போயிற்று இறுதியில இத்தொழில் சந்நியாசிகளாலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள்.

இத்தறுவாயில் சுவாமிகள் ஒரு நாள் அவ்வழி-கால் நடையாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் பின் இருந்து "ஹே சாது. அங்கேயே நின்றுவிடு" என்று ஒரு உரத்த சப்தம் கேட்டது. சுவாமிகள் திரும்பிப் பார்க்கையில் பின்புறம் இரண்டு சேவகர்கள் தொடர்ந்தோடி வர, நல்ல குதிரை மேல் "யூனிபாம்" தரித்து சவாரி செய்து வரும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரைக் கண்ணுற்றார். இருவரும் சமீபத்தில் வரவே பின் வரும் சம்பாஷணை நடந்தேறியது.

இன்ஸ்பெக்டர்!— (உத்தியோக கர்வத்தில்) நீ யார்?

சுவாமிகள்:—(மெதுவாய்) விவேகானந்தன். என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே நான் ஒரு சன்னியாசி என்பது விளங்கவில்லையா?

இன்ஸ்பெக்டர்:— ஓ! சன்னியாசிகள் பெரும் அக்கிரமம் செய்கின்றனர். குடிகளுக்கும் அரசாங்கத்துக்கும் பகை மூட்டிவிடுகின்றனர். சரியான காரணம் சொல்லிக்கொள்ள மாட்டாத அந்த சன்னியாசிகளைப் பிடித்துக் கைது செய்ய எனக்குச் சுதந்திரம் உண்டு. நீர் என்னுடன் வரவேண்டும். உம்மைச் சிறைச்சாலையில் அடைப்பேன்.

(13ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## நெடுந்தீவு சமூக முன்னேற்றச் சங்கம்

'மக்கள் வாழ்வு என்றுமே இருள் மண்டியதல்ல. நெடுந்தீவு மக்களாகிய நாம் ஏற்படுத்திய இச்சங்கம், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கி விட்டது. இச்சங்கத்தின் கோரிக்கைகளான குறுவட்டுவானிருந்து மோட்டார்வள்ளச் சேவையும், பஸ் சேவையும் நெடுந்தீவுக்கு கிடைக்கக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. இவ்வாறு நெடுந்தீவு சமூக முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு.சு. கணபதிப்பிள்ளை விவேகானந்த மண்டபத்தில் கடந்த 27-11-60-ல் நடந்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கணபதிப்பிள்ளை மேலும் பேசுகையில் விளையாட்டு மைதானம் அமைக்கவும் நெடுந்தீவு ரோடுகட்கு பெயர் இடவும், கிராமச் சங்கத்திடம் கோரப்படும் எனவும் கூறினார். திரு அ. யோ. சத்தியபால் பேசுகையில் சங்க வளர்ச்சிபற்றி வற்புறுத்தினார்.

திருவாளர்கள் வ. த. கந்தையா, க. கோபாலன், க. இராமனுதர், சு. சோமசுந்தரம், சந்தியாகு, செபஸ்தியாம் பிள்ளை உட்பட பலர் பேசினார்கள்.

—

## இலங்கை எம். ஜி. ஆர். மன்றம்

"கலைஞர்கள் ஒரு நாட்டின் கண்கள் போன்றவர்கள். கலைஞர்கள் மக்களாலும் மந்திரிகளாலும் மதிக்கப்பட்டு வருகின்ற காலம் இது. கலைஞர்கள் மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்தல் வேண்டும். அப்படி மக்களின் துயர் துடைத்த காரணத்தால் தான் கலைவாணர் என். எஸ் கே. என்றும் மக்கள் மனதில் இடம் பெறலானார்" இவ்வாறு கடந்த 27-11-60 டயஸ் பிளேஸ் 36-ம் இல்லத்தில் எம். ஜி. ஆர். மன்ற ஆதரவில் கலைவாணர் பிறந்த தினத்தில் பேசிய இ.தி.மு.க. பொதுச் செயலாளர் இரா அதிமணி கூறினார். மேற்படி கூட்டத்திற்கு திரு. காந்திநாதன் தலைமை வகித்தார்.

திருவாளர்கள்: சுப. அருணாசலம், ஆர்.ஆர். கே. டேலர், கலையன்பன், எஸ். தமிழ்செல்வன், எஸ். எம். ஏ. ஜப்பார், மொகிதீன், கலையமுதன், பி. எம். சேகர், லடீஸ் வீரமணி, திருமறவன், நெல்லைமுத்து, செல்லப் பாண்டியன், எஸ் எஸ். அச்சுதன் ஆகியோரும் பேசினார்கள். இறுதியில் திரு. கம்பளைதாசன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

—

## அகில இலங்கை பகுத்தறிவு இயக்கம்

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கக் கொழும்புக் கிளை உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று கடந்த 26-11-60 அன்று திரு. வி க. நினைவுப் பள்ளியில் நடைபெற்றது. இயக்கத்தின் தற்போதைய நிலைமையையும் இயக்கத்துக்குப் பெருகிவரும் ஆதரவையும், இயக்க வளர்ச்சிக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும், பொதுச் செயலாளர் விளக்கிய பின் கூடியிருந்த உறுப்பினர்கள் பொதுச் செயலாளர் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை ஆதரித்தும் பாராட்டியும் பேசினா. வேறு சில முக்கிய அலுவல்கள் ஆராயப்பட்டபின கூட்டம் முடிவுற்றது. கூட்டத்துக்கு திரு. மா சே. அருள் தலைமை வகித்தார்.

—

## பாரதி கிராம முன்னேற்றச் சங்கம்

தம்பலகமம் புதுக் குடியிருப்புப் பாரதி கிராம முன்னேற்றச்சங்க இரண்டாவது ஆண்டு விழா அணிமையில மேற்படி கி—மு. சங்கக் கட்டிடத்தில் தம்பலகமப்பற்று கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. திரு சுப்பிரமணியம் தலைமை உரை நிகழ்த்துகையில் கிராம மக்கள் கட்டுப்பாடான ஒற்றுமையுடன் உழைத்தால் மட்டுமே கிராமம் அபிவிருத்தியடைய முடியும். சர்ச்சைக்குரிய சங்க விஷயங்களை மனதில் வைத்துக் கொண்டு ஒருவர்க்கொருவர் பகமை பாராட்டாமல் அந்தந்த மாதாந்தக் கூட்டங்களில் மேற்படி விஷயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும் என்றார். அடுத்து சங்க முன்னாள் கௌரவச் செயலாளர் திரு. எஸ். மயில்வாகனம் சங்கத்தின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். கீழ்க்காணுபவர்கள் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

போஷகர்: திரு. அ கந்தையா, தலைவர்: திரு எஸ் ராமலிங்கம். உபதலைவர்: திரு. என் றிசிங்கோ, செயலாளர்: திரு. எஸ். மயில்வாகனம், துணைச் செயலாளர்: திரு. கந்தமுத்து, பொருளாளர்: திரு. செ. கந்தையா. திருவாளர்கள் முத்துலிங்கம், கரோலிஸ், தல்வத்த, தம்பிராஜா, கந்தசாமி, கதிரித்தம்பி, நாயர் போன்றோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

புதுக்குடியிருப்பில் உள்ள போக்குவரத்துக்கு வாயக்கற்ற ஒழுங்கைகளை ரஸ்த்தாக்களாகச் செப்பனிட்டுத் தருமாறும் பாதை அற்ற இடங்களுக்கு புதிய பாதைகளைத் திறந்து தருமாறும்காரியாதிகாரி அவர்களைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் பொதுச் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

செயலாளர் திரு. எஸ். மயில்வாகனம் நன்றி உரை கூறுகையில் எதிர்வரும் மாசிமாதம் காணிக் கச்சேரி நடக்க இருப்பதாகச் சங்கத்திற்கு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருக்கின்றதென்றும் அச் சமயம் புதுக் குடியிருப்பு மக்கள் காணி கோரி மனுச் செய்ய மறந்துவிடக் கூடாதென்றும் நினைவுபடுத்தினார்.

—

## கர்நாடக இசை ரசிகர்கள் சங்கம்

மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் தலைமையில் கடந்த 12-11-60-ல் மட்டக்களப்பு கர்நாடக இசை ரசிகர்கள் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பு பகுதியிலுள்ள இசை வித்வான்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் இசைக் கச்சேரிகள் ஒழுங்கு செய்து கௌரவிக்கவும், கர்நாடக இசை ரசிகர்களைப் பெருக்கவும். இச் சங்கம் பணியாற்றும் என்று தெரிகிறது.

மட்டக்களப்பு சங்கீத பூஷணம் என். இராசுவின் சங்கீதக் கச்சேரி சுமார் மூன்று மணி நேரம் மிக விமரிசையாக நடைபெற்றது. யாழ்ப்பாணம் செல்லம் ஐயங்கார்-பிடிலும்-மட்டக்களப்பு வேலு மிருதங்கமும் இலங்கை வானொலி முன்னாள் மிருதங்க வித்வான் கணபதியாப் பிள்ளை கஞ்சிராவும் கச்சேரியை மிகவும் சிறப்பித்து ரசிகர்களை மகிழ்வித்தார்கள். இவ்வித பெரும் முயற்சியை எடுத்த மாவட்ட கிராம கைத்தொழில் அதிபர் திரு. வி. குமாரசாமி பலரது பாராட்டுக்கும் உரியவரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

—

## தம்பலகமம் தெற்கு மாதர் சங்கம்

தம்பலகமம் தெற்கு மாதர் சங்கக் கூட்டம் அணிமையில் தலைவி திருமதி. பு. பகவதிப்பிள்ளை தலைமையில் தம்பலகமம் அரசினர் தமிழ் மகா வித்தியாலயக் கட்டடத்தில் நடைபெற்றது. தலைவியின் அறிக்கை படிக்கப்பட்ட பின் குடியும் அதன் தீங்கும் என்னும் பொருள் பற்றி வித்தியாலய அதிபர் திரு. காசிநாதர் [illegible] லாளர் திருமதி க. ராஜேஸ்வரி [illegible] கிராம அபிவிருத்தியில் மாதர்கள் பங்கு என்னும் விஷ[illegible]த்தை அடிப்படையாக வைத்து அரியதோர் சொற்பொழிவாற்றினார். அடுத்ததாகக் கீழ்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:-

(1) அரசாங்கம் தரும் நிதியைக் கொண்டு தம்பலகமம் நாயன்மார் திடலில் சங்கத்திற்கு ஒரு கட்டிடத்தை அமைப்பது.

(2) கோணேஸ்வரர் கோயில் வருடாந்த உற்சவ காலங்களில் பல ஊர்களில் இருந்தும் மக்கள் இங்கு வந்து கும்பலாகக் கூடுவதால் இவ்விடத்தில் ஒரு பொது மலசல கூடம் இல்லாதிருப்பது குறிப்பாகப் பெண்களுக்கு மிகுந்த கஷ்டத்தைத் தருகின்றது. ஆகவே இவ்விடத்தில் ஒரு மலசல கூடத்தை அமைப்பதற்கு கிராம அபிவிருத்தி அதிகாரிகளிடம் நிதி உதவி கோருவது.

(3) ஒரு தையல் ஆசிரியை அனுப்பி வைக்குமாறு பல முறை கேட்டும் காலம் தாழ்த்தப்படுகின்றது. எனவே தொழில் இலாகாவை இந்த உதவியை உடனடியாகச் செய்யுமாறு கேட்டுக் கொள்வது.

—

## சிவல் தொழிலாளர் சங்கம்

கிழக்கிலங்கை சிவல் தொழிலாளர் சங்க ஏறுவூர் கிளையின் திறப்பு விழா கடந்த 14-11-60-ல் வெகு சிறப்பாக நடைபெற்றது. கற்குடாத் தொகுதி எம். பி. திரு. பொ. மாணிக்கவாசகர் மேளவாத்திய இசையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். மேற்படி சங்க மண்டபத்தை திரு. மாணிக்கவாசகர் திறந்து வைத்தார்.

விழாவில் முக்கிய பேச்சாளர்களாக பட்டிருப்பு எம். பி. எஸ். எம். இராசமாணிக்கம், தொழிலதிபர் திரு. மு. பாலசிங்கம், பட்டின சபை உபதலைவர் உட்படப் பல பிரமுகர்களும் சங்க அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். விழாவுக்கு சங்கத் தலைவர் , வே. சின்னராஜா தலைமை வகித்தார்.

மட்டக்களப்பு நகரசபை உறுப்பினரும் தலைச சங்கத் தலைவரும் ஆசிரியருமான திரு. எஸ் ஜேம்ஸ் வடஇலங்கையில் இருப்பது போல் கிழக்கிலங்கையிலும் மாவரி முறையை அமுலாக்கித் தரவேணும் என்னும் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசினார்.

திரு. இராசமாணிக்கம் எம். பி. பேசும் பொழுது தானும் தான் சார்ந்துள்ள கட்சியும் என்றென்றும் தமிழ் பேசும் இனத்துக்காகப் பாடுபட ஆயத்தமாக இருக்கிறது என்றும் கூறினார்.

பட்டினசபை உறுப்பினர் பி. எச். எஸ். சம்புநாதர், பொ. கந்தையா, ஆசிரியர் சிதம்பரம்பிள்ளை ஆகியோர் பேசினர். ஈற்றில் பொதுச் செயலாளர் எஸ். கே. பாலிலுப்பிள்ளை நன்றியுரையுடன் கூட்டம் கலைந்தது.

—

## தீவுப்பகுதி அரசினர் ஆசிரியர் சங்கம்

தீவுப்பகுதி அரசினர் ஆசிரியர் தமக்கென ஒரு பிரத்தியேகமான சங்கத்தைக் கடந்த 20-11-60-ல் 74, 2/3 ஏ. டாம் வீதியிலுள்ள வசந்தன் அலுவலகத்தில் அமைத்தனர். அவ்வமையம் திரு. இ. கந்தையா தலைவராகவும் திரு. த. பரநிருபசிங்கம் காரியதரிசியாகவும் திரு. மு. இலட்சுமணபிள்ளை தனாதிகாரியாகவும் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஈற்றில் காரியதரிசி அங்கத்தவர்கட்கு மகிழ்ச்சி தெரிவித்து உரை நிகழ்த்துகையில் ஆசிரியர்களிடையே புத்துணர்ச்சியும் ஆர்வமும் காணப்படுகிறதென்றும் தீவின் பல பாகங்களிலுமிருந்து தம் பிரயாணக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாது வந்தமைக்குச் சங்கம் நன்றி தெரிவிப்பதாகவும் கூறி, கல்வியில் மாணவர்க்குச் சம சந்தர்ப்பமும்; உத்தியோகத்தில் ஆசிரியர்கட்குச் சம சந்தர்ப்பமும் பெற்றுக் கொடுக்கச் சங்கம் அயராது உழைக்க வேண்டும். ஒருவர் தென்றலைத் தீண்டவும், இன்னொருவர் தீயைத் தாண்டவும் இடமளிக்கக்கூடாது என முடித்தார்.

# தமிழ் படிக்கிறார்கள்;..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆர்னோலெருமன் என்பவரை என்றும் மறக்க முடியாது. இவர் தென்னிந்தியாவிலும வாழ்ந்தவராகையால் நல்ல தமிழிலே பேசினார். அன்றியும் தமிழின் சிறப்பையும் பழமையையும் தமிழரின் நாகரிக உயர்வையும் நன்கு உணர்ந்திருந்தார். தமிழரோடு தமிழர் போல எங்களோடு பழகினார். இவர் சேர்மனிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழ் நூல்களைப் பற்றி உரை நிகழ்தினார்.

### முதல் தமிழ் அகராதி

கி. பி. 1706 தொடக்கம் சேர்மனியர் திராவிடவியலை ஆராயத் தொடங்கினர் எனவும், 1715 இலேயே குருண்டிலா என்பவர் சேர்மன் பல்கலைக் கழகங்களிலே தமிழையுங் கற்பிக்க வேண்டுமென வற்புறுத்தினார் எனவும் தென்னிந்தியாவிலுள்ள தரங்கபாருக்குச் சமயத் தொண்டு புரிய வந்த பார்த்தலோமியசு சைக்கன் பரிக்கு எனும் சேர்மன் அறிஞர் தமிழ் நூல்களைப் படித்துத் தமிழர் பேசுவது போலத் தமிழைப் பேசினார் எனவும், இவர் சில தமிழ் நூல்களை நூறு முறை கூடப் படித்தார் எனவும், உண்ணும் பொழுது கூடத் தமிழ் நூல்களைப் படிக்கக் கேட்டுக் கொண்டு உண்டவர் எனவும், முதன் முதலில் தமிழ் அகராதியை ஆக்கினவர் இவரே எனவும், அவர் தமது உரையிற் குறிப்பிட்டார். சேர்மன் மொழியில் 18-ஆம் நூற்றாண்டு தொடக்கம் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல்களையும் குறிப்பிட்டார். தாம் தாயுமானவர் பாடல்களை மொழி பெயர்த்திருப்பதாகவும் சொன்னார். திருக்குறள் 1854 இல் சேர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளோடு தொடர்புடைய நூல்களை யான் சேர்க்கிறேன் என்று யான் கூறியதும் திருக்குறள் சேர்மன் மொழி பெயர்ப்பின் பழைய படி ஒன்றினை எனக்கு அனுப்[illegible] இவர் கூறினார்.

—(தொடரும்)

# நஷ்ட ஈட்டுக் குற்றங்களில்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுதான் வாகனத்தை ஓட்ட விட்டாலும் அவரின் அசட்டைத்தனத்தால் விளையும் நட்டத்துக்கு வாகனக்காரரே பொறுப்பாளியாவார்.

### விதிவிலக்குகள்

சுயாதீன ஒப்பந்தக்காரரின் (Independant Contractor) செயலுக்கு வேலை கொடுப்போர் பாத்திரர்களல்லர் எனக் கூறப்பட்டது. இதற்கும் விதி விலக்குண்டு.

(1) வேலை கொடுப்போர் ஒப்பந்தக்காரரின் அல்லது அவரின் கையாட்களின் செயல்களில் தேவையின்றித் தலையிட்டு அவர்கள் கருமமாற்று முறைகளை வழிகாட்டி நடப்பித்தால் அவர் பொறுப்பாளியாவர்.

(2) ஒருவர் இன்னொருவரை ஒரு சட்டரீதியற்ற செயலில் இறங்குவதற்கு ஒப்பந்தம் செய்தால் அதன் பலாபலன்களுக்கு அவரே பாத்திரவாளியாவர்.

(3) ஒரு வேலைக்குத் தகுதியற்றவரை ஒப்பந்தக்காரராக்கி அவர் மூலம் வேலையைக் கொண்டு நடத்துபவரும நட்டத்துக்கு பொறுப்பாளியாவர்.

(4) வேலை கொடுப்போர் நட்டஈடு விளைத்த செயலையே தாமாக உத்தரவளித்துச் செய்வித்தால் அல்லது செய்த பிறகு அங்கீகாரம் செய்தாலும் பொறுப்பாளியாவார்.

(5) சட்டப்படி ஒரு கருமத்தையாற்றும் கடமையுள்ள ஒருவர்தன் கடமையை இன்னொருவர் செய்வித்தால், அச்செயலால் வரும் நட்டஈட்டுக் குற்றங்களுக்கு அவரே பொறுப்பாளியாவார். உதாரணமாக ஒருவரின் வீட்டு வாசலில் தெருவோரத்தில் ஒரு பாரமான தூக்குவிளக்கு இருந்தது. அது விழுந்து தெருப்போக்கருக்குக் காயம் விளைத்தால் அவரே பாத்திரவாளி. இவ்விளக்கை ஒரு ஒப்பந்தக்காரரைக் கொண்டு புது பார்ப்பித்தார். எனினும் ஒப்பந்தக்காரரின் அசட்டையால் அவ்விளக்கு தெருப்போக்கர் மேல விழுந்து காயமுண்டாக்கிற்று. இதை நல்நிலையில் வைத்திருப்பது வீட்டுக்காரரின் கடமையாதலா[illegible] அவரே ஒப்பந்தக்கார[illegible] அசட்டைக்குப் பாத்திரவாளியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் எதிர்பாருங்கள்!

## சினிமாஸ் திரைகளில்

பிரேம் நஸீர்—மைனுவதி—எஸ். வி. சகஸ்ரநாமம்—பண்டரிபாய்
டி. எஸ். பாலையா—கே. ஏ. தங்கவேலு—எம். சரோஜா—கே. வி. சாந்தி

முதலியோர் நடித்த

பத்மா பிலிம்ஸ்

# அன்புக்கோர் அண்ணி

டைரக்ஷன்: டி. ஆர். ரகுநாத் ★ இசை: ஏ. எம். ராஜா

பின்னணி பாடியவர்கள்:

ஏ. எம். ராஜா—பி. சுசீலா—டி. எம். சௌந்தரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்—ஜிக்கி
ஜமுனாராணி—டி. எல். ராஜேஸ்வரி—ஏ. எல். ராகவன்.

---

# வெற்றிகரமான 3-வது வாரம்!

## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

[கொழும்பு] [வெள்ளவத்தை] [யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு]



தித்திக்கும் தீஞ்சுவைக் காவியம்!
பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பாங்கான
பைந்தமிழ் திரை விருந்து. உள்ளத்தை உருக்கும் கதை. சிந்தை குளிரும் சிறந்த கீதங்களும்
ஒருங்கே அமையப் பெற்ற அருமையான
திரை ஓவியம்.

ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய
திரைக் களஞ்சியம்.




பிரபல எழுத்தாளர் கி. ரா. கோபாலனால்
எழுதப்பட்டு கல்கியில் தொடர் கதையாக
வந்துள்ள உருக்கமான கதை.

டி. ஆர். மகாலிங்கம், சௌகார் ஜானகி,
வி. ஆர். ராஜகோபால், எம். என். ராஜம்,
சி. எஸ். பாண்டியன்.
என். எஸ். கே. மதுரம், ஸ்டன்ட் சோமு,
ஆர். எம். மனோரமா.

முதலியோர் நடித்த

# அபலை அஞ்சுகம்

பின்னணி

பி. சுசிலா—பி. லீலா—ஆர். ராஜலக்ஷ்மி—எஸ். ஜானகி
ரத்னமாலா—எஸ். சி. கிருஷ்ணன்—ஏ. எல். ராகவன்.

இசையமைப்பு: கே. வி. மகாதேவன்

தயாரிப்பு—டைரக்ஷன்: ஆர். எம். கிருஷ்ணசாமி

இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] சிவநாயகம் அவர்களால் ஒவோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை [illegible] பதிப்பித்து 1960 டிச. 11-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org